உ

திருச்சிற்றப்பலம்.

ஏ[illegible]ர்ந்தவாடி என்னும்

# ஏகாமிரவாடி மான்மியம்

கு. கோ. சாரங்கபாணி ஐயங்கார்

எழுதியது.

சென்னை:

காக்ஸ்டன்பிரஸ்

1907.

உ

திருச்சிற்றம்பலம்.

ஏரூர்ந்தவாடி என்னும்

# ஏகாமிரவாடி மான்மியம்

32/1

8050

91:38

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI

கு. கோ. சாரங்கபாணி ஐயங்கார்

எழுதியது.

சென்னை:

காக்ஸ்டன்பிரஸ்.

1907.

# முகவுரை.

ஏரூர்த்தவாடி, ஏகாம்பிரவாடி முதலிய பல திரு நாமங்களைக் கொண்டு விளங்கும் இந்த க்ஷேத்திரம் திருக்குடந்தைக்குத் தென் கீழ்த்திசையில் சுமார் 11 மைல் தூரத்திலுள்ளது. இத்தலத்தில் புராதனமான சிவ க்ஷேத்திர மொன்றுண்டு. அதனைக் குறித்த வடமொழிப் புராணமும் ஒன்றுண்டெனப் பலராலும் கேள்விப்பட்டு அதனைப் பெறுமாறு நெடுநாள் முயன்று சிலநாட்களுக்கு முன் பரமபதியின் திருவருளால் அத் தலபுராண மடங்கிய ஏடொன்று கிடைக்கப் பெற்று மகிழ்ந்தனன். பின்னர், அதனை வடமொழியில் வல்லவரான பிரம்மஸ்ரீ அம்மையப்பன் அரங்கா சாரியார் பாலீந்து வேண்டிக்கொண்ட வண்ணம் அவர் அப் புராணக் கருத்துக்களைச் சிறிதும் விடாது ஒருவாறு தென்மொழியி லெழுதித் தந்தனர். அத் தென்மொழிப் பிரதியைச் சென்னைக்கு எடுத்தேகி ஆங்குச் சில நண்பர்களைக் கொண்டு ஒருவாறு சீரிட்டு சில தோத்திரப் பாடல்களும் சேர்ப்பித்து அச்சிடலாயினேன். இதனை அச்சிடு முயற்சியிற் பெரிதும் உழைத்த எனது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ ச. நடேசப்பிள்ளை யவர்கட்கு மனமுவந்த வந்தனம் புரியவுரிமையுற் றிருக்கின்றேன். தரும சிந்தனையுடன் இதனை அச்சுக்கூலி யின்றி விரைவில் புத்தக மாக்கித் தந்த ம-ா-ா-ஸ்ரீ க. கன்னைய நாயடு அவர்கள் நன்றியை ஒருநாளும் மறக்கற் பால னல்லேன்.

ஒன்றுக்கும் பற்றாத என்னை இந் நன்முயற்சிக்கண் விடுத்துத் தோன்றாத் துணையாக விருந்து முடித்து வைத்த எல்லாம்வல்ல ஏரூர்ந்தவாடி சுந்தரேசப் பெருமானையும், சுந்தரநாயகி யம்மையையும் மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

கு. கோ. சாரங்கபாணி.

உ

கணபதிதுணை.

# ஏரூர்ந்தவாடி மான்மியம்.

## விநாயகர் காப்பு.

பூமணக்கும் பொழின்மணக்கு மேரூர்ந்த
வாடி யெனும் புனிதஞ் சான்ற
நாமணக்கும் புகழ்மணக்கும் திருப்பதியின்
மான்மியத்தை நவிறற் கன்று
காமணக்கும் புருகூதன் கண்டதொரு
பொழில் மணக்கக் கரக நீரைப்
பாமணக்குந் தமிழ்மூனிவன் கரத்தினின்றுங்
கவிழ்த்தவனைப் பணிகு வாமே.

## சுந்தரேசர்.

உன்னுமடி யார்வினைகள் நீறுபடக்
காட்டுதல்போ லுடல மெங்கும்
தன்னிகரில் பால்வண்ணப் பொடியாடி
யருளுருவாஞ் சத்தி யோடு
பொன்னியலு மேரூர்ந்த வாடியெனும்
பெரும் பதியில் புவனம் போற்ற
மன்னியநல் லேறூருஞ் சுந்தரே
சன்மலர்த்தாள் வழுத்து வாமே.

## சுந்தரநாயகி.

குழவியுறு பிணிகண்டு தாய்மருந்தங்
கருந்து முறை கொண்டு நீங்காப்
பழவினைகள் பாறும்வண முயிர் பொருட்டாத்
திருநடனம் பண்பிற் கண்டு
தொழுமடியார்க் கருள்புரிவா னேரூர்ந்த
வாடி யினிற் றோன்றி நாளும்
மழவிடையா ரிடமமருஞ் சுந்தரநா
யகிமலர்த்தாள் வணக்கஞ் செய்வாம்.

## சித்திவிநாயகர்.

பத்தி செய்யும் பழவடி யார்க்கருள்
மத்த மும்மதி யும்புனை வாண்முடி
நித்த னேரூர்ந்த வாடி நிலவிய
சித்தி யானையைச் சித்தத் திருத்துவாம்.

## முருகன்.

பெருகிய காதலாலே பிறங்கிய பரண்மே ளின்ற
ஒருசிறு மானுக் கன்றங் குழன்றிடு குழகன் றன்னை
மருவிய மயிலை யன்னான் வலனுயர் வேலை யென்றும்
உருகிய மனத்தா னேத்தி யுள்ளுற நினைத்தல் செய்வாம்.

## நால்வர்.

சுட்டாத வொரு பொருளைச் சுட்டுவான் றாள்போற்றி
விட்டேறுங் கற்புணையா விமலனடி மலர்போற்றி
பட்டோலை காட்டெனப்பின் பரவினான் பதம்போற்றி
மட்டாரும் வாசகத்தை வரைவித்தான் மலர்போற்றி.

## அவையடக்கம்.

எல்லாமும் சிவமயமே யென்றிடுவார்க் கிக்கதையு
மெல்லாமும் சிவமயமா யிருத்தலியல் பினதாமே
அல்லாத பேர்க்கெதுவுமல்லாத தாத்தோன்றும்
நல்லாரிஃ தெடுப்பரெனு நன்மையா லிதுவரைந்தேன்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஏரூர்ந்தவாடி என்னும் ஏகாமிரவாடியின் மான்மியம்.

KOVILUR ... YAM.

32

## முதலாவது அத்தியாயம்.

### சிவபெருமான் நந்தீசருக்கு ஏரூர்ந்தவாடியின் மகிமை யுரைத்தது.

சர்வான்மாக்களுக்கும் அந்தர்யாமியாய் நின்று பஞ்சகிர்த்தியஞ் செய்யும் பரமேசுரன், தமது வாம பாகத்தில் அகில லோகங்களையு மீன்றவராகிய பார்வதி தேவியார் அமர்ந்திருக்க ஸ்ரீகயிலையங்கிரியில் எழுந்தருளியிருப்பர். அக்கயிலையங்கிரியின் சிறப்பை நாம் எடுத்தியம்புதல் சாத்தியமன்று. அதன் சாரலில் ஓர் பால் சித்தர்கள் நீங்காது வதிந்து பரமேசுரனை என்றும் சிந்தித்திருப்பர். கந்தருவர் தங்கள் யாழ்களை இசைகூட்டி சாமகானஞ் செய்துகொண்டிருப்பர். மற்றோர் சாரலில் தங்கள் புண்ணிய முதிர்ச்சியால் புனித தேகமடைந்துள்ள முனிபுங்கவர் நிலைத்திருந்து சிவசிந்தனையோடிருப்பர். வேறோர் சாரலில் யோகியர் நெருங்கியிருந்து தங்கள் தபோ மகிமையின் பலன் இதுவாமென்று சிவாநந்தத்திலாழ்ந்திருப்பர். மற்றோர் சாரலில் சிவகணங்கள் சூழ்ந்து நின்று 'சிவ, சிவ' வென்று கோஷித்து நிற்பர்.

அச்சாரல் முழுதும் கற்பகத்தரு, கமுகு, பலா, கொன்றை, புன்னை, அசோகு முதலிய விருக்ஷங்கள் ஆகாயத்தையளாவி வளர்ந்து குளிர்ந்த நிழலைக் கொடுத்

திருக்கும். அம்மரங்களில் தாத்யூகம், சக்கிரவாகம் முதலிய பக்ஷிகள் தங்கி வாழும். அத்தருக்களினின்றும் பெருகும் மகரந்தங்களோடு கூடிய தேனை வண்டுக்கூட்டங்களருந்தி, பிணி மூப்பு சாக்காடு அற்று சதா கானஞ்செய்துகொண் டிருக்கும். குயில்கள் இனிய ஓசையால் சிவஸ்துதி செய்து பாடி நிற்கும். அச்சாரல்களில் பெருகியோடும் அருவிகளினருகிலும், விசாலமான தடாகங்களிலும், மற்றுமிடங்களிலும் புஷ்பித்திருக்கும் குமுதம், தாமரை, உற்பலம் முதலிய மலர்களும், கோட்டுப்பூ, கொடிப்பூக்களும் காலபேதமின்றி என்றும் புஷ்பித்து நேத்திரானந்தத்தைக் கொடுக்கும்.

அன்றி அக்கைலையங்கிரியில் இருக்கு முதலிய நான்கு வேதத்திற்கும், தருக்கம் முதலிய ஆறு சாத்திரத்திற்கும், காமிகம், வாதுளம் முதலிய ஆகமங்களுக்கும், காந்தம், இலிங்கம் முதலிய புராணங்களுக்கும் உரிய அதி தேவதைகளும், திதிவார யோக கரணங்களுக்குரியவர்களும், கரைந்த உள்ளமுடையோராய் சிவத்தின் பெருமையைச் சிந்தித்துக்கொண்டிருப்பர். பரமேசுரன் திருமுன்னர் பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவதா சிரேஷ்டர்கள் நின்று ஆனந்த அருவி பொழிய உள்ளமுருகி தம்மை மறந்து பாடி நிற்பர். இவர்கள் மத்தியில் பரந்த ஆகாயத்தை யலங்கரிக்கும் சூரியனைப் போன்று கோடிசூரியப் பிரகாசனாய், காளகண்ட திரிநேத்திரனாய், அடியார்களன்பே திருமேனியாகக் கொண்டவனாய், சிறந்த இரத்தினங்களா லிழைக்கப்பட்ட சிங்காதனத்தில் பார்வதி சமேதனாய் பரமேசுரன் வீற்றிருந்து ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையால் புன் முறுவல் பூத்து விளங்கினன்.

இவ்வாறு எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானை நந்திகேசுவரர் ஒருநாள் மிக்க பயபக்தியோடு வலம் வந்து சிரம் நிலமுறப்பணிந்து, வாய் பொத்தி, கை கட்டி, உள்ளமுருகிக் கூறுவார்.

ஓ தேவ தேவா ! சராசரங்கள் எல்லாவற்றிற்கும் தலைவ! எம்போலியர் பாசபந்தங்களையகற்றித் திருவடி நீழலையளிக்கும் பரமேச ! சம்போ ! சதாசிவ ! உருவாயமர்ந்து உலக காரியம் நடாத்தும் எம்பெரும ! அருவாயமர்ந்து முத்தியளிக்கும் பரம்பொருளே ! அருவுருவாயமர்ந்து அடியார்க்கருளும் தயாநிதி ! உனது ஒப்பற்ற புகழை என்னாற் சொல்லத்தரமோ! அப்புகழை நீயே விளக்கினாலன்றி ஆன்மாக்களுணரும் தரத்தில்லையே. நீ திருவிளையாடல் செய்த திவ்ய க்ஷேத்திரங்கள் பலவுண்டென்று அறிகின்றேன். அவற்றுள் நினைத்தமாத்திரத்தில் முத்தி கொடுக்கக்கூடியதும், நிகரற்ற பெருமையுடையதுமான க்ஷேத்திரமொன்றைத் திருவுளம் பற்றுவீராயின் அநவரதமும் போற்றித் துதிசெய்திடுவேன். அதனைத் தரிசித்து மனிதர்கள் தாங்கள் செய்துள்ள பாவங்களையகற்றி எளிதில் தமது திருவருளுக் காளாம்படி முயல்வார்கள். உலகிலுள்ளவும், தர்மார்த்த காமங்களைக் குறைவற அடைவார்கள். தேவர்களும் அந்த க்ஷேத்திரத்தைத் தரிசிப்பதால் தங்கள் துன்பத்தை யகற்றி தேவரீரது திருவருளாகிய இன்பக்கடலில் ஆழ்வார்கள்.

தேகமெடுத்ததின் பயனைத் தம்மை யாராதித்து முத்திக்கேதுவான வழியைத் தேடிக் கொள்ளவேண்டும், இதனை உணராது தேவர்களும், மானுடர்களும் அழிந்துபோவார்களாயின் அது தமது திருவருளின்

பெருமிதத்திற்குக் குறையாமன்றே. இவ்வகைய க்ஷேத்திரமொன்றை அடியேன் உணர்ந்து அதனைத் தரிசித்து ஏனையோர்க்கும் அதன் சிறப்பை எடுத்தியம்பி யாவரையும் கிருதார்த்தராக்கவேண்டு மென்று எண்ணுதல் தமது திருவருளெழுச்சி யென்றே சொல்வேன். ஆகையால் என் மனோரதத்தை நிறைவேற்றவேண்டு மென்று மீண்டும் பணிந்து நின்றார்.

நந்தியெம்பெருமான் வாசகங்களைத் திருச்செவியேற்ற சிவபெருமான் அகங் களித்துப் புன் முறுவல் கொண்டு திருவாய் மலர்வதானார்: ஏ பக்த சீலனாகிய நந்தீ ! உன்னுடைய பக்தியே பக்தி. நீ என்றும் நம்மைத் தரிசித்து, நீங்காதிருப்பதோடு நமது புகழையுமுணர்ந்து மலரகிதனாக இருத்தலால் நீ உய்யும்படியாக எந்த க்ஷேத்திரத்தையும் தரிசிக்கவேண்டியது இன்றும். ஆயினும் ஏனைய ஆன்மாக்களின் மீது வைத்த கிருபையே இங்ஙனம் விண்ணப்பித்துக் கொள்ளுதற்கிடங் கொடுத்ததென்று நாம் உணர்வோம். இதுவும் உன் பெருமிதத்திற்கு ஒரு அணிபோல்வதாகும். உன்னை யொப்பார் தேவர்களிலும், முனிபுங்கவர்களிலும், மருத்துக்களிலும், பக்தர்களிலுமில்லை. இவ்வகைய சிறப்புடைய நீ கேட்டது வீண் போகலாமா ? போகாதபடி நீ கேட்ட இலக்கணங்களோடு கூடிய பதியொன்றைக் கூறுகின்றோம். கேட்பாயாக:

பூவுலகின்கண் நாம் அமர்ந்து அருள் செய்யும்படியான திருக்கோயில்கள் இரண்டுலக்ஷத்திருபத்தீராயிரத்து நானூறு உண்டு. இவற்றுள் முக்கியமானவை எழுநூறாகும். இவற்றுள்ளும் அதிசிரேட்டமானவை இருபத்திநான்காகும். அவை:—

| | | |
|---|---|---|
| ஸ்ரீசைலம் | வேணுவனம் | பணிமலை |
| கேதாரம் | தாடவனம் | ஏகாம்ரவாடி |
| கோகர்ணம் | அருணசலம் | காசி |
| ஆடகேசுரம் | வைத்தீசவரம் | கரவீரவனம் |
| ஆனைக்கா | விருத்தகிரி | கழுக்குன்றம் |
| மதுரை | கும்பகோணம் | அக்ஷபாதத்தலம் |
| இடைமருதூர் | பிப்பலேசம் | கிருபாபுரம் |
| சிதம்பரம் | மாயூரம் | கோடி சங்கர சம ஸ்தானம். |

இவ் விருபத்தி நான்கினுள் மிக்க மேலானதும், தன் புகழைக் கேட்டமாத்திரத்தில் முத்தி கொடுக்கும்படியானதும், நினைத்த மாத்திரத்தில் மனோரதபலனைக் கொடுக்கும்படியானதும், இருந்து தரிசித்த மாத்திரத்தில் ஜென்ம சாபல்யமாக்கக் கூடியதுமானது ஏரூர்ந்தவாடி என்னும் திவ்ய க்ஷேத்திரமாம். இந்த க்ஷேத்திரம் பரதகண்டத்தில் கீழ் சமுத்திரத்திற்குச் சமீபமாய் மேற்குத்திக்கில் கும்பகோணத்திற்குச் சற்று மேற்கே காவேரிக்கரையின் தென் பக்கலில் காத தூரம் மணம் வீசும் நறுமலர்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்டு விளங்கும். இங்கு என்றும் மந்தமாருதம் வீசிவருவதால் அதனை யடைந்தோர் பிணி மூப்புச் சாக்காடு நில்லாது ஒழிந்துபோம். ஒருவன் எவ்வளவு அகிர்த்தியனுயினும், அசுத்தனுயினும், கூடா ஒழுக்கங்கொண்டோனுயினும் உள்ளன்போடு நினைப்பானுயின் அவனைப் பீடித்துள்ள துன்பமெல்லா மொழிந்து சுத்தனுவான். இதனல் இதற்கு இராஜவிருக்ஷ வனம் என்ற மற்றொரு பெயருமுண்டு. ஒருவன் அறிந்தும் அறியாதும், மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களாற் செய்துள்ள

பாவங்களை சிந்தனை மாத்திரத்தாலேயே இப்பதி பரிகரிப்பதாகும். சிதம்பரத்தைத் தரிசித்தும், காவேரியின் சங்கமஸ்தானத்தில் முழுகியும் அடையும்படியான பலன் இப்பதியாலடையக் கூடிய பலனுக்கு நிகரன்றாம்.

## இரண்டாவது அத்தியாயம்.

### க்ஷேத்திரமகிமையுரைத்தது.

மேற்கண்டவாறு ஏரூர்ந்தவாடியினது தன்மையைப் பரமேசன் நந்திகேசுரர்க்குத் திருவருள் பாலித்ததைக் கேட்ட அக்கணத்தலைவர் உள்ள முழுதும் பூரித்து, அன்புபெருகி "அடியார்க்கு நல்லாய்! பரம கருணாநிதீ! பார்வதி சமேதா! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய க்ஷேத்திரத்தின் மகிமையாலேயே சகல பாவங்களையும் ஒழிக்கவல்ல தாகும் என்று தெரிந்துகொண்டேன். அதன் புகழை மேலும் உணர்ந்து என்னைப் போன்றோர் கிருதார்த்தராவதற்கு அதன் மகிமையை யுரைக்கவேண்டுகிறேன்" என்று பணிந்து நின்றார்.

இவ்வேண்டுகோளைத் திருச்செவி யேற்ற எமது பெருமான் புன் முறுவல் பூத்து, ஆநந்தமிக்குடையோராய் "அப்பா நந்தீ! உன் மனோரதம் எளிதானதல்ல. பிரம விட்டுணுக்களாலும் இதன் பெருமை விளம்பப் போமோ? ஒருவன் பலவாண்டுகளாகப் பகர்ந்துவரினும் மட்டுப்படாது. இப்படிப்பட்ட பெரும் புகழுடையதை உனக்கும், அடியாருக்குமாக ஒருவாறு எடுத்துரைக்கின்றோம்" என்று பார்வதி சமேதனாகிய பகவான் திருவாய்மலர்வதானார்:

இத்தலத்தின் பெருமையைப் பற்றி ஆராயுங்கால் ஆதியுகமாகிய கிருதயுகத்தில் மூன்று யோசனை தூரமும், திரேதாயுகத்தில் இரண்டு யோசனை தூரமும், துவாபரயுகத்தில் ஒரு யோசனை தூரமும் அதன் பரிசுத்தம் பரவியிருந்து இதற்கு மத்தியில் வசிப்பவர்களை ஸ்நானபான நியம நிஷ்டைகளாற் பரிசுத்தர்களாக்கி முத்திக்கு வித்துப்போலிருக்கும். கலியுகமாகிய இந்த யுகத்தில் அரையோசனைதூரம் இதன் சுத்தம் பரவியிருந்து மேற்கண்டவாறே பிரயோசன முண்டாக்கும். அங்கு என்றும் நீங்காது சகல தேவர்களும் விருக்ஷரூபமாகவும், வாஜபேயம் முதலிய வேள்விகள் செடிகொடிகளாகவும்,கந்தருவரும் அவர்கள் பத்தினிகளும், புல்லுருவாகவும், கல்லுருவாகவும் வதிவர். இருடிகளும், உத்தமகுணப்பெரியோரும் தெருக்களில் பராகங்களாயிருப்பர். பதினோரு ருத்திரரும், பன்னீராதித்தரும், சித்தர்களும், திக்குப்பாலகரும், மருத்துக்களும் வெவ்வேறுருவெடுத்து அங்கு வதிவர். மேடம் முதலிய இராசிகளும், அசுவினி முதலிய நட்சத்திரங்களும், யோகங்களும் அங்கு நிலைத்திருப்பார்கள். சகல ஞானங்களுக்கும் இருப்பிடமாம். தனியனுகிய தேவகுருவும் அவ்விடத்தில் தவஞ் செய்தாரென்றும் அவர் தவத்திற்கு மகிழ்ந்து நாமே மார்கழி மாசத்தில் திருவாதிரையில் சகல தேவர்களும், நடனர்களும் புடைசூழக்காட்சி தந்து அருள் பாலித்தோ மென்போமாயின் இதனிலும் சிறந்த க்ஷேத்திரம் எங்குண்டு என்றூர்.

# மூன்ருவது அத்தியாயம்.

## பிரகற்பதிக்கு அருள்சுரந்தது.

இதைக்கேட்ட நந்தியெம்பெருமாள் பேரானந்த மடைந்தவராய் சுவாமியை வலம்வந்து பணிந்தெழுந்து 'எம்பெரும! தேவரீர் திருவுளம் பற்றியதைச் செவி மடுத்து ஆநந்தித்தேன். தேவகுருவாகிய பிரகற்பதிபக வான் இந்த க்ஷேத்திரத்தில் தவஞ்செய்து கீர்த்திபெற்ற தற்குக் காரணம் கூற வேண்டுகின்றேன்' என்று பிரார்த்திக்க, பரமேசன் பகருவதானுர்.

அமுத கலைகள் பதினறும் நிறைந்த சந்திரன் கௌமார பருவத்தில் தேவகுருவின் பத்தினியாகிய தாரை என்பவளால் மயக்கப்பட்டு அவள் மயக்கிலாழ்ந்து அவளைப் புணர்ந்து புதன் என்னும் புத்திரனைப் பெற்ருன்.

இச் சந்திரன் ரூபலாவண்யத்தில் சிறப்புற்றிருந்த தன்றிக் காம சாத்திரத்திலும் வல்லவனுதலால் தாரையும் அவனைவிட்டு நீங்குதற்கு மனமில்லாதவளாய் அவனைப் பிரியாது சிலகாலம் சந்திரனுடைய கிருகத்திலேயே வசித்து வந்தாள். இதை உணராத தேவகுரு தன் பத்தினியைக்காணுமல் எல்லா விடங்களிலுந் தேடியும் காணுது ஏக்கங்கொண்டு பைத்தியத்தால் ஐந்தாறு நாள் திரிந் திருந்தார். அப்போது ஏருர்ந்தவாடியின் வீதிவழியாய்ப் போக நேர்ந்த நாரதமுனிவர் பிரகற்பதியின் மன நிலையறிந்து பரிதபித்து அவர் மனைவியாகிய தாரை சந்திரனைக்கூடிப் புதன் என்னும் புதல்வனைப் பெற்றுக்கொண்டது மல்லாமல் சந்திரனேடே வசித்து வருகின்ருளென்று சொன்னுர்.

இதைக் கேட்டதும் தேவகுரு தலைகுனிந்தவராய் பேராச்சரிய மடைந்து இப்படியும் நமது மனைவி செய்வாளா? குணத்தில் மிக்க திருத்திகரமா யிருந்தாளே! அவள் அந்நிய புருஷனை யணைந்துபெற்ற பிள்ளை நம்முடையதாமா? அதனை வழித்தோன்றலென்று பிதுர்க் காரியங்களுக் கெப்படிக் கொள்ளக்கூடும். ஒருவேளை நம்மை விருத்தனென்று விலக்கினளோ? அன்றி ஸ்திரீகளுக்கியற்கையி லமைந்துள்ள வஞ்ச நெஞ்சால் நமக்குச் சதிசெய்தாளோ ! இன்றேல் நாரதரால் புனைந்துரைக்கப்பட்ட மொழியாமோ! என்று பலவாறு சிந்தித்து யாவும் நேரிலறிகுவோமென்று சந்திரனுடைய கிருகத்தை யடைந்தார். அங்கிருந்த தாரை தன் கணவனைக் கண்டவுடனே விரைவிலெழுந்து அவர் முன் நிற்காமல் ஓடி மறைந்துவிட்டாள்.

இதைக்கண்ட பிரகற்பதி மனந் தளர்ந்தவராய் நாரதர் சொல்லியது உண்மையாகவே முடிந்து விட்டது. குழந்தையோடு தாரையும் நம்மைப் பார்க்கிறதற்கு வெட்கி யோடி ஒளிந்தமையால் அவள்செய்த வஞ்சகம் வெளியாகின்றது. ஆயினும் அவளை நாம் பார்த்தவுடனே பழயநினைவு மேலிட்டு அவள் நமது யாகாதி கிருத்தியங்களுக்கும், அதிதி பூசைக்கும் உரித்தானவளென்று பரிதபிக்கச் செய்கின்றது. என் செய்வது! மகாரிஷிகளும் அகலிகை முதலாய் அபகாரஞ் செய்த ஸ்திரீகளை மறுபடியும் சேர்த்துக்கொள்ள வில்லையா! ஆதலால் நாமும் சேர்த்துக் கொள்வதால் என்ன குறையமையும். நாம் தேவகுருவா யிருப்பதால் ஒருவரும் தோஷம் சொல்லார். நமது கிழப்பருவத்தில் வேறு தகுந்த மனைவியும் வாய்ப்பது அருமையென்று நினைத்து அவளைத் தேடிப்பிடித்து தனது கிருகத்திற்

கழைத்துப் போனுர். போனவர் அவளைப் பகிரங்கத்தில் மனைவியாக வரிக்காமல் வெளிக்குப் பயந்து அந்தரங்கத்தில் மருவவுட்பட்டார். இதனைக் கண்ட தாரை சந்திரனுடைய சுக மனுபவித்தவ ளாதலால் கிழவராகிய பிரகற்பதியை வெறுத்து அவரது தளர்ந்தவயதில் யாகாதிகாரியங்களில் மனத்தைச் செலுத்துவதை விடுத்து மருவலில் ஈடுபடுவது தகாதென்றும், அப்படி மருவுவதற்குவரின் தான் நினைத்தவாறு போகங்கொடுக்கக்கூடுமாயின் வரலாகுமென்றுஞ் சொன்னுள். இதைக்கேட்ட குரு சாபல்ய சித்தத்தால் யோசனை செய்து தாரையின் மோகத்திலாழ்ந்து சித்தத்திற்கு வலுவைக்கொடுக்கக் கூடிய மதுவைப்பானஞ் செய்து அதனுல் பலமடைந்து அல்லும் பகலும் அவளை மணந்திருந்தார். ஒருநாள் மதுமயக்கம் அதிகமாகிவிட்டபடியால்அரையில் ஆடையின்றி வீதியில் புரண்டு கிடைப்பதை நாரதர் தற்செயலாய் அவ்விடம் போகையில் பார்த்து வெறுப்புக்கொண்டு தேவலோகம் போய் இந்திரன் முதலிய தேவர்களுக்குக் குருவின் செயலைச் சொல்லினர். இதைக்கேட்ட தேவர்கள் செவிபொத்தி பிராமணனும், குருவாயு மிருக்கும் பிரகற்பதி இப்படியுஞ் செய்துயாவருக்கும் இழிவை யுண்டாக்க லாகுமா! இனி அவர் முகாலோபனமுஞ் செய்யலாகாதென்று அப்புறமகன்று போயினர்.

பின்பு தேவகுருவானவர் மயக்கந் தெளிந்து தன் கூடா வொழுக்கத்தால் தேவர்கள் தன்னை வெறுத்து விட்டனரென்று தெரிந்து மன மிகக்கலங்கி யெப்படி யான் செய்த பாவத்தைப் போக்கிக்கொள்வே னென்று பலவாறு சிந்தித்துக் கடையில் சகலபாவங்களையும் போக்குவது பசுபதியின் மந்திரமாதலால் அதனையுச்

சரித்துக்கொண்டே பரமேசனைத் தரிசித்துப் புனித ருகும்படி எங்குந் தேட வாரம்பித்தார். சகல லோகங் களிலுந் தேடிக் காணாமையால் ஏக்கங்கொண்டு பூவுல கத்தில் திரிகையில் பாதகண்டத்தின் தெற்கே சோழ மண்டலத்திலே காவேரியின் தென்கரையிலே கொன் றைமலர்கள் மிகுதியும் புஷ்பித்து பொற்பந்தல் இட் டது போலிருக்கும் ஓரிடத்தில் கோடிசூரியப் பிரகாச மாயிருக்கும் ஒரு புற்றைக்கண்டு அங்கு தங்கினார். தங்கி இவ்விடமே நாம் தவஞ்செய்து பசுபதியைக் காணக் கூடிய யோக்கியதையை யுடையதாம் என்று நிட்சயித்து இடந்திருத்திக் குண்டவேதிகைகள் அமை த்து அநேககாலம் அருந்தவ மிழைத்தார். முடிவில் சங்கரன் தரிசனங் கொடாமையால் தமது உயிரை யொழித்துக் கொள்ளத்துணிந்து தவத்தைவிட் டெழு ந்து குண்டத்தை வலம்வந்து அதில் நிறம்பியிருக்கும் அக்கினியில் 'சிவ சிவ' என்னும் ஸ்மரணையோடு விழப் போகையில் பரமேசன் பார்வதி சமேதனாய் காட்சி கொடுத்து குருவின் கையைப்பற்றி நிறுத்தினார். பிர கற்பதியும் ஸ்வாமியென் றுணர்ந்து வலம வந்து ஆநந்தமே லீட்டால் பணிந்து வேதங்களாற் றுதிசெய்வ தானார்.

## நான்காவது அத்தியாயம்.

### தேவகுருவின் பாவ விமோசன முரைத்தது.

இதனைக்கேட்ட நந்தியெம்பெருமான் பேராச்சரி யமடைந்து ரௌரவாதி நரகங்களுக்கு ஆளாகவேண் டிய தேவகுரு அவ்வளவு சீக்கிரத்தில் எப்படி ஞான

முதிர்ந்து துதிசெய்ய வாய்த்தார் என்று பரமேசனைக் கேட்க, அக்கினியில் விழுந்து மடிந்துபோக யத்த னிக்கையில் தடுத்துக்காக்கு நிமித்தம் நீட்டிய தமது திருக்கர பரிசமே பரிசுத்த மாக்கியதால் ஞானோதயத் திற் கிடங்கொடுத்த தென்று சொல்லி மேலும் அருளுவ தானார். இவ்வாறு ஞானமடைந்த பிரகற்பதி இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி, இருவிழிகளிலும் ஆநந்த நீர் அருவியாகப்பாய, மெய் சிலிர்த்து, நாத் தழுதழுத் து, எந்தாய் ! எந்தாய்! ஒன்றுக்கும் பற்றாத பெரு நரகிற்காளாய என்னைத் தடுத்தாண்ட சீர்த்தியை என் சொல்வேன்? உனக்கு விரோதிகளா யிருந்த திரிபுராதி களை நகைத்து எரித்து ஆட்கொண்டதும் நின் கருணை யின் பெருமிதம் என்று என் விஷயத்தால் உணர்கின் றேன். வேதசொரூபி என்பதும், யாகாதி கிருத்தியங்க ளின் பலன் நீதான் என்பதும், சர்வ லோகங்களுக்கும் அந்தர்யாமியாய் நின்று ஆங்காங்குள்ள ஆன்மாக்க ளின் வினைக்கேற்ப போகங் கொடுத்து ஆட்கொள்ளு கின்றனை யென்பதும், நின்னையன்றி ஓரணுவும் இயங் காதென்பதும் தத்துவங்கடந்த தனிப்பழம் பொருள் நீ என்பதும், உணர்ந்து நமஸ்கரிக்கின்றேன். நீபர்வத ராஜ புத்திரியை வாமபக்கத்தி லமர்த்தியது எம்போலி யர் கிருக கிருத்தியம் நடைபெறுதற்கும், உலகரக்ஷ ணார்த்தமு மென்று உணர்கின்றேன். உன்னை யுள்ளன் போடு துதித்து வழிபடு வோனுக்கு, மாதாவும், பிதா வும், குருவும், தெய்வமுமா யிருப்பதன்றி, சுற்றத்தி னரும், சிநேகரும், புதல்வருமாகஅமர்ந்து சந்தோஷ மூட்டுவை யென்று காண்கின்றேன். வேதத்தில் முறை யிடுகின்ற அகோரம் முதலிய மந்திரங்களுக்கும்,பகவன் முதலிய பெயர்களுக்கும் தலைவன் நீயே யென்று உண

ர்ந்து நமஸ்கரிக்கின்றேன். இவ்வகைய சிறப்புக்களுடைய தேவரீர் என்னையும் ஒரு பொருட்டாய் மதித்து காட்சி கொடுத்ததால் நான் இழைத்த பாவமனைத்தும் பரிகரிக்கப்பெற்று சுத்தனுனேன் என்று மீண்டும் வணங்கினுர்.

இத்தோத்திர மொழிகளைக் கேட்ட பரமேசன் கிருபை சுரந்தவராய்த் தேவகுருவை விளித்து 'அன்பா! உன்னுடைய தவத்திற் களித்துள்ளோமாதலால் நீ வேண்டும் வரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்வாயாக' வென்று கட்டளையிட்டார். இதைக்கேட்ட தேவகுரு அஞ்சலியத்தராய் பரமேசா! உனது தரிசனமும் பரிசமுங் கிடைத்த மாத்திரத்தில் நான் வேண்டப்படுவதுவேறென்றிருக்குமோ! ஒன்றுமில்லையாயினும் நாமகார்த்தமாயாயினும் கேட்கின்றேன். நான் மதுபானஞ்செய்து அதனல் விளைத்துக்கொண்ட மகாபாதகம் அகன்று விடவேண்டும். இங்கு என் தவத்துக்கிரங்கிக் காட்சிகொடுத்த தினமாகிய இன்றுமுதல் பார்வதி சமேதனுய், நந்திமுதலிய கணத்தலைவர்கள் புடைசூழ இக் கொன்றை மரத்தடியில் எழுந்தருளி யிருந்து நின்னைச் சரணமடைந்தோரது குற்றங் கவனியாமல் திருவருள் பாலிக்கவேண்டும்; இன்றுமுதல் உற்சவம் செய்யவும், நினது திருக்கோயிலைப் புதுப்பிக்கவும் திருவுளம் பற்றவேண்டும். இவ்விடத்தில் நிலைத்துவசிக்கும்படியான சர்வான் மாக்களுக்கும் முத்தியும் தரவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணிக் கொண்டார். இவற்றைக் கேட்ட சிவபெருமான் நீ கேட்ட யாவும் ஆன்மாக்களின் க்ஷேமத்தைக் கருதியே பரிந்து கேட்கின்றனை யென்று நமக்குத் தோற்றுவதால் அப்படியே யாகுக என்று கட்டளையிட்டனர். பிரகற்பதியும்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)

பன் முறைபடிந்து 'உய்ந்தேன், உய்ந்தேன்' என்று ஆநந்தக்கூத்தாடிச் செல்வதானார்.

## ஐந்தாவது அத்தியாயம்.

### உற்சவச் சிறப்புரைத்தது.

ஸ்ரீ பரமேசனது திருவருள் பெற்ற தேவகுரு மனமிகக் களித்தவராய் முதலில் கோயிலைப் புதுப்பிக்கு மெண்ணத்தோடு தேவகம்மிய னாகிய விசுவ கர்மனை யழைக்க அவனும் உடனேவந்து கட்டளை யேதென்று கேட்டான். தேவகுரு அவனுக்கு ஏரூர்ந்த வாடியில் புற்றிடங்கொண்ட ஸ்தானத்தைக் குறிப்பிட்டு இவ்விடத்தில் முன் யுகங்கள் மூன்றிலு மிருந்த கோயில் ஜீரணமாய் இருப்பதால் அதனை நீ அரையோஜனை விஸ்தீரணத்தில் அமைக்கவேண்டும்; அப்படி யமைப்பதில் சப்த பிராகாரங்களும், ஆகாயமளாவிய பலநிலைக் கோபுரங்களும், நிறுத்த மண்டபம், மாகா மண்டபம், கலியாண மண்டபம், ஆலோசனை மண்டபம், வாகன மண்டபம், பரிசன மண்டபம் முதலிய கட்டடங்களும் அமைந்திருக்க வேண்டும். விசாலமாகிய படித்துறைகளோடு கூடிய திருக்குள மமைக்கவேண்டும். சுவாமி காரியத்திற்காகப் பள்ளியறை, மடப்பள்ளி முதலியன அமைந்திருக்க வேண்டும். பரிவார தேவதை களுக்கு அவரவர் இடத்தில் தக்க கோயில்கள் அமைந்திருக்கவேண்டும். திருக்கோயிலைச் சுற்றிலும், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம், கோங்கு, மந்தாரை, வில்வம், புன்னை முதலிய புஷ்பங்கள் நிறைந்த நந்தவனம் அமைந்திருக்க வேண்டும். கோயில் அர்ச்

சகர்களாகிய ஆதிசைவப் பெரியோருக்கு வாசஸ்தானம் தனியே யமைந்திருக்க வேண்டும். பிராமணர்கள் இருந்து வாழ்வதற்கும், யாகாதிகிருத்தியங்கள் செய்வதற்கும் அக்கிராரம் அமைந்திருக்க வேண்டும். மற்றை வருணத்தருக்குத் தக்கவாறு விடுதிகள் அமைந்திருக்க வேண்டும். ஆவணச்சாலை ஆங்காங் கமைந்திருக்க வேண்டும். இவைகளுக்கு மத்தியில் முன் குறிப்பிட்ட புற்றின்மீது சவுந்தரநாயகி சமேதராய் ஏகாமிரநாதன் எழுந்தருளி யிருக்க நவரத்ந கசிதமான சிம்மாசனமும், அதன்மீது பசும்பொன்னாலாகிய விதானமும், திருமுன் மண்டபமும் கண்டோர் மனத்தைக் கவரும் வண்ணம் அமைந்திருக்க வேண்டும். வெளியே அறச்சாலைகுருபூசைமடம் முதலியன அமைந்திருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அப்படி ஆகட்டுமென்று விசுவகம்மியனும் தன் மனத்தாற் சிந்தித்து முடித்து விண்ணப்பித்தான்.

முடித்ததை விசுவ கம்மியன் கண்குளிரக் கண்டு கோயிலுக்கருகில் இலக்குமி தீர்த்தம், மாநச தீர்த்தம், வருணதீர்த்தம் என்னும் மூன்று தீர்த்தங் கண்டு அதில் மூழ்கி கோயில் விருக்ஷமாகிய கொன்றை விருக்ஷத்தையும் வலம் வந்து சுவாமியையும் அம்மையையும் பன்முறை வணங்கித் திருமுன் முதுகு காட்டாது பிரியா விடைபெற்றுத் தன் பதியை யடைந்தான். பின்னர் தேவகுருவும் ஒவ்வொன்றையும் பார்த்து அவற்றின் பொலிவையுஞ் சிறப்பையும் வியந்து கும்பாபிஷேகஞ் செய்து பிரம்மோற்சவம் செய்து சுவாமியைத் தரிசிக்கு மார்வத்தராய்ப் பிரார்த்தித்தார். ஈசனும் திருவருள் சுரந்து அங்ஙனமே யாகுக வென்று அனுமதி யளித்ததும் மாநசதீர்த்தத்தில் தீர்த்தமாடி

விபூதி உருத்திராக்கம் பூண்டு, பரம சாம்பவராய் தை மாசத்தில் நாலாமிடம், ஆறுமிடம் சுத்தமாயுள்ள ஒரு சரலக்கினத்தில் அசுவநி நக்ஷத்திரத்தில் துவஜாரோகணஞ் செய்தார். பலதிக்குகளிலும் ஆவரணங்களிலும் சகல தேவர்களையும் காப்பாயமைத்தார். பின்னர் ஒவ்வொரு தினத்திற்குமுரிய சிறந்த வாகனங்களில் சுவாமியையும் அம்மனையும், கணேசர் சுப்பிரமணியர் முதலியவர்களையும் எழுந்தருளச்செய்து உலகிலுள்ளாரும், தேவர்களும் புடைசூழ்ந்துவர திருவீதி உத்சவங்கண்டு, அந்தணர், அறவோர் முதலியவர்களுக்கு அன்ன பானாதிகள் குறைவறக் கொடுத்தார். தலைவர்களாய் நின்று சிறப்பாய் நடத்திய யாவருக்கும் பட்டு பட்டாவளிகள், கடக கங்கணம், மோதிரம் முதலிய பரிசுகள் வெறுக்கக் கொடுத்து அவரோகணம் செய்து வைத்தார். பின்னர் எக்காலத்திலு முபயோகமாகுமாறு ஆகாயத்தை யளாவிய ரதமும் சமைத்து வைத்தனர்.

இப் பிரம்மோற்சவத்தைப் போலவே மாசோத்சவமும், நித்தியோத்சவமும், பிரதோஷோத்சவமும், மற்றும் விசேஷகாலங்களில் நடக்கவேண்டிய உத்சவங்களும் இரண்டுவருஷ காலங்களாகச் செய்து பிரம்மானந்த மடைந்து கிருதார்த்த ராயினர். இதனைத் தரிசித்த பூவுலக வாசிகளெல்லாம் பேரானந்த மடைந்து தேவ குருவைப் பெரிதும் வியந்து பாராட்டினர். தேவர்களெல்லாம் பக்தி சுரந்தவர்களாய்த் தேவகுருவின் கிருபையால் பரமேசனது திருவிழா விபவங் கண்டு களித்து ஞானவாரிதியில் மூழ்கித் தின்பமகன்றோமென்று ஆரவாரித்து தேவகுரு செய்த பெரும் பாதகச் செய்கையும் அவர் தவத்தாலும், கோயில்

ஜீர்ணோத் தாரணத்தாலும், பிரமோற்சவச் சிறப்பாலும் நீங்கிற்றென்று அன்று முதல் பழமைபோல் குரு வாக வகித்துக் கொண்டனர். ஆயிரங் கண்ணனாகிய தேவேந்திரனும் பிரகற்பதி பகவானை ஓர் உயரிய ஆத னத்தில் அமர்த்தி வலம்வந்து மரியாதை செய்து குரு வாக வகித்தனன். தேவகுருவும் சிவத்தியானத்தோடு இருந்தார்.

## ஆறாவது அத்தியாயம்.

### ஏகாமிரனென்னும் பிராமணன் தவச்சிறப்புரைத்தது.

இவ்வாறு உற்சவச் சிறப்பைக் கேட்ட நந்தி யெம்பெருமான் ஏரூர்ந்தவாடி க்ஷேத்திரத்தில் அள வற்ற பக்தியுடையவராய் பரமேசனை வணங்கி 'சுவாமி! தங்கள் திருவாக்கால் தேவகுரு செய்த பதிபுண்ணியங் களை யுணர்ந்தேன். அவர் செய்த புண்ணியச் செய்கை யால் தேவர்கள் இன்றும் கூட்டங் கூட்டமாகச்சென்று ஏகாமிரேசனைத் தரிசித்துக் கிருதார்த்தராவதையும் உணர்ந்தேன். அங்கு எழுந்தருளியிருக்கும் பரமேச னுக்கு ஏகாமிரேசர் என்னும் பெயர் வந்ததற்குக் கார ணங் கூற வேண்டுகின்றேன்' என்று பணிவாய்வேண்ட கயிலாயபதி திருவுளம் பற்றுகின்றார்.

கேளாய் நந்தி! அந்த க்ஷேத்திரத்தில் பூர்வகாலத் தில் ஏகாமிரனென்னும் பிராமணனொருவன் பெருந் தவஞ் செய்ததால் அவன் தவத்துக் கிரங்கிப்பரமேசன் விசாக நட்சத்திரங் கூடிய சுபதினத்தில் தேவ கணங் கள்புடை சூழ, தரிசனங் கொடுத்ததால் அன்று முதல் அப்பெயர் வழங்க லாயது. இனி அப்பிராமணன்

பெருந்தவமிழைக்கப்போந்த காரணமேதென்று கேட்பாயாயின் கூறுகின்றேம். முற்காலத்தில் பிப்பலன் என்னும் பிராமணோத்தமன் ஒருவன் இருந்தான். இவனுக்கு ஏகாமிரன் என்னும் பெயருடைய புதல்வன் ஒருவன் பிறந்தான். இவன் பிறந்தது முதல் அறிவு மிகுந்து அதனல் வேத வேதாகமங்களைப் படித்துணர்ந்து அவற்றிற் கண்ட உண்மைப் பொருளுக்கிணங்க பரமசாம்பனைப், விபூதி உருத்திராக்கமணிந்து, நீங்காது சிவஸ்மரணை செய்து கொண்டே அடியார் சிநேகம் விரும்பி, அவர்களுங்குத் தொண்டு செய்வதும், அவர்கள் விரும்பியதைக் கொடுப்பதுமே விரதமாய்ப்பூண்டு இருந்தான். அன்றி ஆங்காங்குள்ள சிவ க்ஷேத்திரங்களுக்குப் போய் சிவமூர்த்தங்களை விதிப்படி அருச்சித்தேத்தி ஆநந்தத்திலாழ்ந்திருப்பான்.

இப்படிச் செய்துவருங்கால் ஒரு யோசனை தோன்றி நாம் பெருங்கலை கற்றும், கற்றதின்படி யொழுகியும் வருவது பரமேசனது திருவருள் பெற்று முத்தியடைதற்கல்லவா ? அத்திருவருளைப் பெறுவதற் கறிகுறியாக அம் மகாதேவனையே நாம் நேரில் தரிசிக்க வேண்டும். அத்தரிசனையி னிமித்தம் எப்படிப்பட்ட கடுந்தவமிழைக்கவும் பின்வாங்கேன் என்று விரதம் பூண்டு காசி முதலிய பல க்ஷேத்திரங்களிலும் பலகாலமிருந்து கடுந்தவ மிழைத்தும் பரமேசன் தரிசனங்கொடாமையால் கடைசியில் தக்ஷிணபாகத்தில் காவேரியின் தென்கரையில் கும்பகோணத்திற்கு அருகில் ஒரு க்ஷேத்திரம் மிக்க உத்தமமானதா யிருக்கக் கண்டு இவ்விடமே தவத்திற்கு யோக்கியதையான தாம் என்று தங்கிஆங்கிருந்த தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து சுவாமி

யையும் அம்மனையும் விதிப்படி பணிந்து கொன்றை விருக்கத் தருகில் யாககுண்ட மமைத்து நாற்புறமும் தீமூட்டி மத்தியில் சூரியாக்கினிதகிக்க ஆகாயநோக்கிய முகத்தோடு உஷ்ணகாலத்தில் தவஞ் செய்யலானார். மாரிகாலத்தில் மேல் நோக்கிய முகத்தோடு சலினங் கொஞ்சமு மின்றி சிவ சிந்தனையோடு இருந்தார். இவ்வாறே தினமும் திரிகாலங்களிலும் மூன்று தீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்து பதினாலாண்டு கடத்தினர். இப்பெருந்தவத்தைக் கண்ட தேவர்களெல்லாம் தங்கள் பதங்களைக் கிரகிப்பதற்காக இப்பெருந்தவஞ் செய்கின்றான் போலும் என்று வெருண்டனர்.

## ஏழாவது அத்தியாயம்.

### ஏகாம்ரனுக்குப் பரமேசன் காக்ஷிதந்தது.

ஏகாம்ரன் தவத்தைக் கண்டு பயப்பட்டு தேவர்கள் பெருங் கூட்டமாகக் கூடி ஸ்ரீ கயிலாயத்தை யடைந்து அவன் ஏகசித்தனாய்ச் செய்யுந் தவத்தைப் பற்றிக் கூறினர். இதைக் கேட்ட பரமேசன் சிரம் துளக்கி யருளுவதானார். "தேவர்களே! ஏகாம்ரன்செய்யுந் தவத்தின் சிறப்பையும், அவன் மனத் தூய்மையையும் நாம் உணர்ந்துள்ளோம். எவனாயினும் இந்திரிய நிக்கிரகஞ் செய்து, வைராக்கிய சித்தனாய், தெளிந்த மனத்தோடு என்னைத் தியானிப்பா னாயின் அவனுக்குரிய இடரனைத்தையுங் களைந்து விரும்பிய வரமனைத்து மருளுவோம். அவனை விட்டு நீங்காது உறைவோம். இக் காரணத்தாலேயே சமஸ்த இருடிகளும் எம்மை அடியார்க்கெளியன் என்று அரைவது. இப்படிப்பட்ட

அடியார்மீது நாம் வைத்துள்ள அன்பு, நமது தேவி யாகிய பார்வதி மீதும், திருக்குமாரர்களாகிய விநாய கர், சுப்பிரமணியர் மீதும், நந்தி கணத்தலைவர் மீதும், நமது படைகள் மீதும் வைத்துள்ள அன்பிற்கு மிகுந் ததாம். ஆதலின் ஏகாமிரனுக்கு நாம் அருள் செய்வ தில் பிற்படோம்" என்று விடைகூறி யனுப்பினர்.

பின்னர் அருள்மிகச் சுரந்தவராய்ச் சிவகணத்தலை வர்கள் புடைசூழ்ந்துவரத் திருக்கோயில் விட்டெழுந் து ஏகாமிரவாடியில் பிராமணன் தவஞ்செய்யுந் தலத் தையடைந்து வைகாசி மாசத்தில் விசாக நட்சத்திரத் தில் பௌர்ணமி திதியில் பகற்காலத்தில் அங்கு திருக் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் பெருமானின் பிம்பத்தி லாவிர்ப்பவித்துக் கோடிசூரியப் பிரகாச னுய்க் காக்ஷிதந்ததுமன்றி அப் பிராமணனுடைய இரு கரங்களையும் பற்றிக்கொண்டு கருணை நிறம்பிய முக முடையவராய் "ஓ விப்பிர சிரேஷ்டா! நீ புரிந்ததவத் தின் மகிமையால் நீவிரும்பியதை யருளமுன்வந்தோம். கூசாது கேட்டுப் பெறலாம் என்று கூறினர்.

யோக சமாதியிலிருந்த பிராமணோத்தமன் கண் ணைத் திறந்து பார்த்துப் பரமேசனது திவ்ய மங்கள கோலத்தைக்கண்டு பெரு விம்மித மடைந்து சட்டென வெழுந்து வலம்வந்து நிலமுறப் பணிந்து அஞ்சலியத் தனுய் மெய்விதிர்த்து வாய்குழறி, நாத்தழு தழுத்துத் துதிக்கலானுன். ஏ சம்போ! சங்கரா! மகாதேவா! இடபக் கொடியா! வேதப்பசு ஊர்வோய்! நின்மலா! சகலபுவன காரணு? அடியார்க் கெளியா! சோம சூரியாக்கினி களையே கண்களாய்க்கொண்டோய்! உல கங்களை யாக்குவதில் பிரமனுயும், ஆக்கியதை இரக்ஷிப்

பதில் அரியாகியும், அவற்றை யழிப்பதில் உருத்திரனு யும், அவற்றிற்கு முத்திகொடுப்பதில் சதாசிவனுயும், அவ்வுலகங்களில் வாழும் சகல ஆன்ம வர்க்கங்களுக் கும் வேண்டியபலத்தைக் கொடுப்பதில் சத்தியாயும் இருப்பவன் நீயே யன்றோ? இந்திரிய நிக்கிரகஞ் செய்த பெரியோரைக் காக்கு நிமித்தம் காமதகனனுனய். இந் திரிய வயத்தராய மானுடர்க்கு அக் காமனைக்கொடு தவனுனய். உலகங்களை யழிக்க வெழுந்த கங்கையைஒரு துளியாக மாற்றிச் சடையிற் றரித்தாய். எல்லாக் கார ணங்களுக்கும் பூதனுயிருக்கும் படியான உன்னையன்றி நான் கேட்டுப் பெறவேண்டிய பொருளும் வேறுண் டோ? உனது தரிசனமே எனக்குரிய பேற்றை யடை வித்ததன்றி மனத்திற் கொண்டிருந்த எண்ணத்தையும் நிறைவேற்றிய தாதலால் எனக்கென்று ஒன்றும்வேண் டேன். இனி உலகினர்க்காக வாயினும் ஒன்றுவேண்டு வேன். இன்று முதலாக இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கும் படியான மூர்த்தி என் பெயரால் வழங்கப் படவேண்டும். இங்குள்ள இலக்குமி தீர்த்தத்தில்படிந் தோருக்கு அட்ட லக்குமிகளின் செல்வமும் அமைய வேண்டும்'' என்று வேண்டினர்.

அப்பரமேசுரனும் அப்படியே யாகக்கடவ தென் று வரமருளிக் கடைக்கண் சுரந்து தாம் தோன்றிய விடத்திலேயே அந்தர்த்தான மாயினர். அப்போது தோன்றிய பசும்பொன் போன்ற பேரொளியால் பழ மையுற்றிருந்த அந்த க்ஷேத்திரமுழுதும் பசும்பொன் மயமாயிற்று. இதைக் கண்ட ஏகாமிரன் முதலியவர் கள் பேராச்சரிய மடைந்து சிவத்தின் திருவருளைச்சிந் தித்து நீங்காத ஆநந்தத்திலாழ்ந் திருந்தனர். இதன்

பின்பு சிலகாலஞ் சென்று ஏகாமிர நாதர் என்னும் பெயரால் உச்சவ மூர்த்தஞ்செய்து திருவிழாக் கண்டு களிக்கு மெண்ணமுடையவராய் ஏகாமிர னென்னும் பிராமணன் முயல்வதானன்.

## எட்டாவது அத்தியாயம்.

ஏகாமிரேசர் உற்சவச்சிறப் புரைத்தது.

மீண்டும் ஸ்ரீ காளகண்ட திரிநேத்திரனுகிய பரமேசன் நந்தி தேவரைப்பார்த்துச் சொல்லுவார். கேளாய் நந்தி! நமது கருணைக்குப் பாத்திரனுன ஏகாமிரன் மீண்டும் நம்மை வணங்கித் தன் பெயரா லமர்ந்த மூர்த்திக்குத் திருவிழாச் செய்து, தானும் தன்னையடுத்த பூவுலகினரும் கடைத்தேறுவதற்காக நம்மை உத்தரவுகேட்க அங்ஙனமேஅருளினேம். அதனைமேற்கொண்டு விசுவ கம்மியனுகிய தேவ சிற்பியைத் தருவித்து எமது சம்மதத்தை யுரைத்து ஏகாமிரநாதன் என்னும் பெயரோடு கூடிய உச்சவ மூர்த்தியும், அம்மூர்த்திக்குரிய வாகனங்களும், மண்டபங்களும், பரிவாரதேவதைகளும், அவர்களுக்குரிய வாகனங்களும், அவரவர்கட்குத் தகுந்த கோயில்களும், உலாப்போகத் தகுந்த பத்திகளும், நடனசாலை, கலியாண மண்டபம், ஆஸ்தான மண்டபம், ஆலோசனை மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், உற்சவத்திற்காகக் கூடும் சகல ஜனங்களும் தங்கி வசித்தற்கு யோக்கியதையான சத்திரம், மடம், தடம், வளாகம், நந்தவனம், திருக்குளம், மஞ்சனச்சாலை, அறச்சாலை முதலியன அமைக்கும்படி கட்டளை யிட்டான். கம்மி

யனும் சிரமேற் கொண்டு அப்படியே செம்பொன் மய மாய்ச்செய்து கண்டோர் வியக்கும்படி அன்றேமுடித் தான். உற்சவதினங்கடோறும், ஏகாமிர நாதனுக்கும், சௌந்தர வல்லிக்கும் சாத்தவேண்டிய ஆரகேயூர, கடக கங்கணங்களும், சரப்பளி, காசிமாலை, முத்துச் சரம், மோகனமாலை, பவழமாலை, சுவர்ன வில்வமாலை முதலிய ஆபரணங்கள் கோடி சூரியப் பிரகாசமாய்ப் பிரகாசிக்க அமைத்தான். மண்டபங்கள் தோறும் பர மேசன் திருவிளையாடல்களை விளக்கவல்ல பலசிறந்த சித்திரங்களை யமைத்தான். வீதிகள்தோறும் பல மகர தோரணங்களும், பூப்பந்தல்களும், விடாய் மண்டபங் களு மமைத்தான்.

இவ்வாறு சிறப்போடு செய்து முடித்த சகல கட் டடங்களையும், மற்றும் ஆபரணம் முதலியவைகளையும் ஏகாமிரன் கண்குளிரக் கண்டு பெரு மகிழ்வடைந்து இலக்குமி தீர்த்தத்தில் நீராடி விபூதி உருத்திராக்க மணிந்து சித்த சுத்தியோடு ஆலயத்துள் நுழைந்து சுவாமியையும் அம்மனையும் வணங்கி ஸ்தல விருக்ஷத் தையும் வலம் வந்து பாதபிரக்ஷாளனம், ஆசமனம், பிராணுயாம முதலிய சங்கற்பங்கள் பூண்டு துவாஜா ரோகணஞ் செய்து, பலி ஓமங்களைக் குறைவரச்செய்து திக்குப்பாலகர்களைப் பந்தனஞ் செய்து ஒவ்வொரு தினத்திற்கும் தக்க சிறப்போடு திருவிழாச் செய்வித்து இத்திருவிழாவைக் காணவந்த வேதப்பிராமணர் முத லிய சகலர்க்கும், சித்திரான்னங்களோடு கூடிய சுகந்த அன்னபானுதிகளைக் கொடுத்து தாம்பூல புஷ்ப சந்த னுதிகளால் அவர்களைத் திருத்தி படுத்தினுர். ஏவலர் முதலியவர்களுக்குக் குறைவறக் கொடுத்துச் சந்தோ ஷிப்பித்தார். இன்னும் செய்யவேண்டிய சகல கிரியை

களையுஞ் செய்து உற்சவப் பூர்த்தி செய்து நித்திய பூஜையும் புரிவித்துப் பெருமகிழ்வெய்தினர். சிவபெருமானும் ஏகாமிரன் பக்திக்கு வியந்தனர். பின்பு அப் பிராமணனும் சிலநாள் அந்த தலத்தில் வசித்திருந்து தன் ஜன்ம தேசமே சென்று நாளேற்றத்தில் சிவசாயுச்சிய மெய்தினன்.

## ஒன்பதாவது அத்தியாயம்.

### பிருகுமுனிவர் பிரமலோக மடைந்தது.

ஏகாமிரன் உற்சவச் சிறப்பைக் கேட்டுக் களிப்படைந்த நந்தியெம்பெருமான் சுவாமியை வணங்கி வினவுவதானர். "பரமேசா! தீனதயாளா! எண்டோள் முக்கண் எம்மானே! ஏகாமிரனென்னும் பிராமணன் செய்த சகல புண்ணிய காரியங்களுக்காக ஸ்நானஞ் செய்துவந்த இலக்குமி தீர்த்தம் அங்குற்றதற்குக் காரணமும், அதற்கு அப்பெயர் வந்ததும் உரைக்க வேண்டுகின்றேன்" என்றூர். அப்படியே ஆகட்டும் என்று சுவாமி யருளுவதானர்.

முந்நாளில் மகரிஷிகள் பலர்கூடி கங்கா தீரத்தில் சத்திரயாகமொன்று நடத்தினர். அதன் பிராத ஸவநம் முடிந்த பின்பு யாவரும் ஓரிடத்திலமர்ந்து மாயை வயப்பட்டவராய் எக்ஞயத்திற்கு அதிதேவதையாயிருந்து ஆகுதி பெறுதற்கு அருகனுயிருக்குந் தேவன்யாவனென்று விசாரணை செய்வதானர்கள். சிலர் சிருஷ்டி கர்த்தாவா யிருக்கும் பிரமனே யாவா னென்றனர். சிலர் இலக்குமியை மார்பிலேந்தி பூமியாகிய பெண்ணையணைந்து ஆங்குறையும் சகல ஆன்மாக்களையும் இரக்ஷி

8050
Q1·38

க்கும் கடவுளாகிய விஷ்ணுவே ஆவனென்றனர். சிலர் சொற்பதங்கடந்த தொல்லோனுகவும், பிரம விட்டுணு உருத்திரராகிய மூவருக்குந் தனிமுதலாகவும், சகலான் மாக்களுக்கும் வினைக்கேற்ப போக போக்கியங்களை யருளி முடிவில் கருணைக்கடலா யிருந்து சம்மரித்து முத்திவீட்டைக் கொடுப்பவனுகவும், வேத புருஷனுக வும், யாவர் எது செய்யினும் அந்தரியாமியாயிருந்து அறிந்து பலன் கொடுப்பவனுகவுமுள்ள கயிலாய வாச னே நமது யாகங்களுக்குத் தலைவனு மென்றனர்.

இப்படி மூன்று வகையாகச் சிற்சிலர் சொல்லிய தால் முடிந்த பொருள் இதுவென் றுணர்ந்து தேற இடமில்லாமல் தங்களுள் பிருகு முனிவரை விளித்து வானுலகம் போய் ஆங்காங்குள்ள விசேஷங்களையுணர் ந்து மூல புருஷனை யறிந்து தங்களுக் குணர்த்தித் திட புத்தி யுண்டாக்கவேண்டு மென்றனர்.

## பத்தாவது அத்தியாயம்.

### பிருகுமுநிவர் சாத்துவிக மூர்த்தியையறிந்து உரைத்தது.

மீண்டும் பரமேசன் நந்தியை நோக்கிக் கூறுகின் ரூர். ஏ நந்தி, கங்காதீரத்தில் உள்ள முனி புங்கவர் கள் சந்தேக சித்தத்தால் பிருகு முனியிடம் விண்ணப் பித்துக் கொண்டதை யவரும் தட்டாது ஏற்று இசைந் தவராய் ஆகாயமார்க்கமாய் முதலில் பிரமலோகத்தை யடைந்து பிரமன் கொலு வீற்றிருக்கும் மண்டபத்திற் சென்று ஒரு முகூர்த்தகாலம் தோத்திரம் செய்தும் திரும்பிப்பார்க்கவில்லை, தனது புத்திரன் வேண்டுகின்ரு

னென்றும் கவனிக்கவில்லை. பிரமன் தனது சிருட்டிக்கு வேண்டியதைக் கவனித்தும் சரஸ்வதியின் வேதப் பொருளில் ஆழ்ந்தும் இருந்துவிட்டான். இதனைக்கண்ட பிருகுமுனி கோபங் கொண்டவராய் இந்த பிரமன் எக்ஞபுருஷ னுகான் என்று கயிலாயத்தை யடைந்தனர். பிருகுமுனிவரின் கருத்தையும், தன்மையும், இருடிகளின் மயக்கையும் உணர்ந்த பரமேசன் யாகங்கள் பல செய்தும், வேதமோதியும் பதிபிக்ஷயமில்லாத பிராமணர்களாகிய இவர்களுக்குத் தாம் அகன்றிருக்கவேண்டு மென்று பிருகு முனிவருக்குத் தரிசனங் கொடுத்திலர். இரண்டு முகூர்த்தகாலம் வாயிலிலிருந்து தோத்திரஞ் செய்தும் வெளிப்படவில்லை. அதனுல் பிருகுமுனி கோபங்கொண்டு என் தோத்திரத்திற் கிறங்காத நீயும் எக்ஞத்திற் கருகனல்லை யென்று பிதற்றி அப்பாற்போய் வைகுண்டத்தை யடைந்தனர். அங்கு அநந்தனுகிய சயனத்தின்மீது நித்தியசூரிகள் புடை சூழ, நீளாதேவி கால்வருட, இலக்குமி மார்பில் இலங்க, சகலாபரண பூஷணனுய் விஷ்ணு நித்திரை போவதைக் கண்ட பிருகு மூன்று யாமம் தோத்திரஞ் செய்தும் கண் விழித்துப் பார்த்து கருணை கூரவில்லை. இதனுல் பிருகு பெருங் கோபங்கொண்டு தேவருட்டலைவராகிய முத்தேவர் செய்தியு மிப்படியா யிருக்கின்றதென்று மூர்க்கங் கொண்டு பாய்ந்து விஷ்ணுவின் மார்பில் உதைத்தனர். இவ்வுதை பட்டதால் விஷ்ணு விழித்தெழுந்து பிருகு முனிவரைக் கண்டு ஓடோடி வந்து அவர் பாதங்களில் வீழ்ந்து பிராமணோத்தமரான தங்கள் பாதம் நோக இவ்வளவு தூரம் வரலாகுமா? வந்தும் என்னை உதைக்கலாகுமா? அதனுல் வருத்தமடைந்த பாதத்தை வருடுகிறேன் என்று பிடி

த்துக்கொண்டு தன்னையடைந்த காரணங் கேட்டார். பிருகுமுனிவரும் கோபந் தீர்ந்து சற்று வெளியே போய் வந்து தெரிவிப்பதாய்ச் சொல்லி வெளியே வந்து கங்காதீரத்தை யடைந்து தாம் ஒவ்வோருலகத்திற்குப் போனதும், அங்குள்ளதேவர்கள் நடந்ததும் சொல்லி முடிவில் விஷ்ணுவின் பூஜைக்குக் களித்துப் பெருமையாய்ப் பேசினர். அதில் இருடிகளும் நம்பகங் கொண்டு இனி தாங்கள் நடத்தும் யாகாதிகிருத்தியங்களுக்குத் தலைவர் விஷ்ணுமூர்த்தியே ஆவார். அவரே மும்மூர்த்திகளுக்குஞ் சிறந்தவராய்ச் சாத்துவிக மூர்த்தியாயிருப்பதால் என்று துணிந்தனர்.

## பதிமூன்றாவது அத்தியாயம்.

### திருமகள் தவஞ்செய்தது.

சகல லோகநாயகனாகிய பரமேசனை மீண்டும் நந்தி பார்த்துச் சொல்லுகின்றார் ; சுவாமி ! பிருகு முனிவர் விட்டுணுவை உதைத்து அதனால் அவர் பூஜையும் பெற்றுப் போனபின்பு நிகழ்ந்ததைக் கூறவேண்டுகின்றேன் என்னலும் சொல்லுவதானார். நந்தி பிருகு முனிவர் போனபின்பு விட்டுணுவின் மார்பில் வதியும் இலக்குமி கீழிறங்கி கோபக்குறியோடே தனது கணவனாகிய திருமாலைப்பார்த்துக் கூறியதாவது. சுவாமி! அடியேன் வெகுகாலமாய்த் தேவரீரிடத்தில் சித்த பக்தியுடையவளாய், இடையறாது தம்முடைய சரணாரவிந்தங்களை யாசித்துப் பெறப்பட்ட வக்ஷஸ்தலத்தில் வாசஞ் செய்யப்பட்டவளாய், தேவரீரையே வணங்கித் தமது கட்டளைப்படியே நடக்கின்றவளாய் இருக்கின்றேன்

என்பது தமது திருவுளம் அறிந்த விஷயமே யன்றோ? அப்படி யிருக்க, தற்காலம் ஒரு துரும்புக்கும் இணை யாகாத பிருகுவின் பாதத்தால் உதைக்கப்பட்டேன். இதுவும் தமது திருவுளத்திற்குச் சம்மதமோ? பிராண நாதரே! அவன் என்னைப்பாதத்தால் உதைத்த பின் பும் அவனை நீர் பூஜித்தீரே; அவனுடைய துர்க்குணத் தையாவது மறுத்துக் கேட்டீரில்லையே; இனிஇவ்வாறே மற்றுயாரேனும் உதைத்தாலும் அவர்களையும் இவ் வாறு பூஜிப்பதுதானே தமது இயற்கையாகவிருக்கும்? தமது திருவுளம் இதுவாயின் எனது நிலைமை என்ன வாகும்; உலகில் சாமானிய மனிதனும் தன் மனைவியை அவமதித்த ஒருவனை மிரட்டிப் பயமுறுத்தல் முதலாக பிராணஹானி செய்தல் ஈறான தண்டனைசெய்வது சகச மாக விருக்கின்றது.

சுகதுக்கங்களுக்கு உடன் பட்ட மனைவியின் நிமித் தம், கிடைத்தற்கரிய பெரும்பொருள்களையும் இப்பூமி யில் பாமரர்களும் துறந்துவிடத் துணிவார்கள். தேவ ரீருக்கு அடியாளிடத்தில் அவ்வளவு அபிமானமும் இல்லாமற் போயிற்றே. ஆகையால் யான் உம்மால் இன்னும் என்ன பிரயோஜன மடையப்போகிறேனோ, இனி நான் உம்மை விட்டு எங்கேயாவது சென்று சஞ்சரிப்பதே நலம் என்று பலமுறை சொல்லியும் நல்லுத்தரம் பெறாமல் தண்டகவனத்தை நோக்கிச் சூரியன் சிங்கராசியில் வஸிக்கும் போது, பௌர் ணமி கூடிய வெள்ளிக்கிழமையில் சாயங்காலத்தில் காவேரியின் தென்கரைக்கு ஒரு யோஜனை தூரத்தில் சமுத்திரத்துக்குச் சமீபமாய் சிவபெருமானுக்கினிய ஒரு உத்தம க்ஷேத்திரத்தில் திருமகள் குதூஹலத் தோடு சென்றாள்.

ஆங்கு உருக்கி ஒடவிட்ட தங்கம்போல் திரு மேனி ஒளியுடையவளாய் திவ்ய பீதாம்பரம் தரித்து ஸர்வாபரணு லங்கிருதையாய் யௌவன பருவத்தோடு ஸர்வாங்க சுந்தரியாய்த் தனித்துச் சஞ்சல வீக்ஷண முடையவளாய் மகா கீர்த்திபெற்று பிரம்மாதிகளா லும் நமஸ்கரிக்கப்பட்ட உலக மாதாவானவள் மின் னல் கொடிபோல் சஞ்சரித்து வந்தாள். தன்னுடைய சரீர லாவண்யத்தாலே அந்த கானகத்தில் பத்துத் திசைகளையும் பிரகாசம் செய்து கொண்டு உலாவி வரு கையில் வாயு திசையை நோக்கினுள்.

அவ்விடத்தில் நவரத்தின கசிதமான விமானத் தைக்கண்டு இதென்னவென்று ஆச்சரியப்பட்டு சிறிது யோசித்து நின்று பிறகு அது இன்னது என்று அறிந்து தனக்குள் சிந்திப்பாளாயினுள். நாம் இந்த நிர்ஜனமான கானகப் பிரதேசத்தில் சிவபெருமானை யுன்னித் தபசுசெய்து அவருடைய கிருபையால் நமது மணவாளரை இங்கு வரவழைப்போம் என்று நிச்சயஞ்செய்து அற்புதமான ஒரு தடாகத்தைக் கம லம், உற்பலம், கல்ஹாரம் முதலான புஷ்பங்களாலும் ஹம்ஸகோகில ஸாஹஸங்கள் முதலான பக்ஷிவர்க்கங்க ளாலும் நிறைந்து விளங்க இச்சையாலே நிருமித்தாள். அதற்கு மேற்குத் திக்கில் சமீபத்தில் ஒரு வில்வ விருக்ஷத்தையும் ஸம்பூரணமான பலங்களுடன் தனக்கு நிழல் செய்யும்படி சிருஷ்டித்தாள். பிறகு அந்த ஸ்ரீ விருக்ஷ மூலபாகத்தில் தபசு செய்ய நிச்சயித்த மகாலக்ஷ்மி ஸ்ரீமந் நாராயணனை பகவான் தரிசனம் தந்தருளித் தன்னைப் பாணிக்கிரஹணம் செய்யுமளவும் தனது தபஸை விடுவதில்லையென்று உறுதியை அடைந் தாள்.

அன்று முதல் தன்னுடைய தடாகத்தில் பக்தியுடன் நீராடி ஈர வஸ்திரத்துடன் விமானத்தைப் பிரதக்ஷிணம்செய்து உத்தம குங்குமங்களாலே சௌந்தரிய நாயகியை பிரதி தினமும் அர்ச்சனைசெய்து வந்தாள்.

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

### திருமகள் திருமாலைப் பாணிக்கிரகணஞ்செய்தது.

ஓ நந்தீச ! அந்த மகா லக்ஷ்மி மௌன விரத முடையவளாய் இடைவிடாமல் தேவனுக்கும் தேவிக்கும் ஒவ்வொரு தினமும் ௱அ-பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து பக்தியுடனே மாவினல் தீபாராதனம் செய்து சுந்தரநாயகனை வில்வங்களாலும் சௌந்தரிய நாயகியைக் குங்குமத்தாலும் அர்ச்சித்து இனிய கனிவர்க்கங்களை நிவேதனம் செய்து பூஜித்து வந்தாள்.

ஒவ்வொரு நாளும் தான் அர்ப்பணம்செய்த தீபத்தினுடைய மாவில் ஒரு பலப் பிரமாணம் புசிப்பதுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேஷமாயும் பூஜை செய்து வந்தாள். இவ்விதம் ஒரு மாதம் வரையில் நியமம் நீங்காமலும் சங்கேதம் தவறாமலும் ஆராதித்து கடை வெள்ளிக் கிழமையில் தன்னுடைய விருக்ஷ மூலத்திலேயே நின்று ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்தித்தாள்.

அப்பொழுது அம்மஹாலக்ஷ்மியினுடைய தவப் பிரபாவத்தாலும் சங்கரனுடைய கட்டளையாலும் ஸ்ரீமந் நாராயணன் அதிவேகமாய் சமஸ்தவாத்திய கோஷத்தோடும் பரிவாரங்கள் சூழ வந்து மஹா

லக்ஷ்மியைக் கரம்பற்றினர். லக்ஷ்மிதேவியும் ஸர்வப் பிராணிகளுக்கும் தர்ம, அர்த்த, காமங்களை அருள்புரியும் திருமாலைப் பின்வருமாறு துதிப்பதானள்.

மகா பலிச்சக்கிரவர்த்தியால் வலிமை யடைந்த தேவர்களுக்காக முன் வாமன ரூபத்தைக்காட்டி பிறகு, மூவுலகும் ஆச்சரியப்படத் திருவிக்கிரமாவதாரம் செய்தவராயும் சங்கு சக்கிர கதாயுதராயும் புருஷோத்தமனென வேதத்திலோதப் பட்ட ஸ்ரீமந் நாராயணா! அநந்தகோடி நமஸ்காரம் என்று பலமுறை ஸ்துதி செய்தாள். இவ்விதம் ஸ்துதிசெய்து இருகரங்களையும் கூப்பிக்கொண்டு அடியேன் தவஞ்செய்த இந்த ஸ்தலத்தில் தேவரீர் நித்தியவாஸம் செய்யவேண்டும். நான் இந்த விடத்தில் சங்கர ஸேவையால் சித்திபெற்றமையால் இது ஸர்வ தேவர்களாலும் சித்திப்பிரஸ்தம் என்று புகழப்படவேண்டும். என்னல் நிர்மாணம் செய்யப்பட்ட இந்த தடாகம் மங்களகரமானதாய் ஸ்நானஞ் செய்பவர்கள் குபேரசம்பத் துடையவர்களாக அருள் புரியவேண்டும். சிராவண மாதக் கடைவெள்ளியில் என்னிடம் தேவரீர் கிருபை புரிந்தமையால் இச் சுபதினத்தில் ஸ்ரீ சௌந்தரிய நாயகனுக்குத் திருக்கண்ணுடிப் பள்ளியறை மகோற்சவம் செய்விக்கும் ஆவலுடையேன் ஆகையால் அவ்வாறுக அருள் புரிதல் வேண்டும் என்று பிரார்த்திக்க திருமாலும் அரியதவத்தினல் மெலிவடைந்த மகாலட்சுமியின் அபிப்பிராயத்துக்கு இணங்கினர். பின்பு திருமால் திருமகள் சமேதமாய் கணக்கில்லாத தேவகணங்களுடன் கூடி ஏகாமிர நாதனுக்கு மகோற்ஸவம் முடித்து, லக்ஷ்மிதீர்த்தத்தில் மிகவும் புண்ணியமான அவபிரதஸ்நாந உற்சவமும் செய்வித்தார்.

பின்னும் விஷ்ணுமூர்த்தி அந்த லக்ஷ்மியுடன் அவ் விடத்திலேயே நிரந்தர வாஸம் செய்ய அங்கீகரித் தார். அதுபற்றி அந்த க்ஷேத்திரம் இன்றும் ஹரி ஹர க்ஷேத்திரம் என்று தேவர்களாலும் புகழப்படுகிறது. திருமகளால் நிருமிக்கப்பட்ட தீர்த்தம் பரம சிவத் திற்கு மிகவும் அன்புடையதான படியால் அத்தடா கத்தைத் தரிசித்தாலும் தடாகநீரைப் பானம் செய் தாலும் அதில் ஸ்நானம் செய்தாலும் சர்வபாவத் தினின்றும் விலகி விரும்பிய அனைத்தும் ஒருங்கே அடையப் பெறுவார்கள். லக்ஷ்மி தீர்த்தத்தில் நீராடி, லக்ஷ்மிநாதனை பூசித்தவன் உடனே சிவ ஞான முடையவனுவான். லக்ஷ்மீ தீர்த்தத்தில் நீராட உறுதியான பக்தியோடு தன் மனையை விட்டு வெளியில் ஓரடியாகிலும் வைத்தவன் உடனே சிவ ஞானியாய் விடுவான். உலகத்தில் மானுடதேகம் வரு வது துர்லபம், அதிலும் சிவபக்தி வருவது துர்லபம், அதிலும் சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவனுதல் துர்லபம். அதில் சிவதரிசனம் கிடைப்பது துர் லபம். இவைபோல் கங்கா ஸ்நாநம் மிகவும் துர்லபம். வில்வதளத்தால் சிவபெருமானைப் பூஜிப்பது மப்ப டியே துர்லபமாம். அதுபோலவே சிவ பக்தர்களை யடையப் பெறுதலும் துர்லபம். இவை யனைத்தினும் சிவஞாநம் வருவது பரம துர்லபம். இந்த திரி நேத்திர நாதனுடைய ஸந்நிதானத்தில் வாஸஞ்செய் யக்கிடைப்பதும் வெகு துர்லபம். அது கிடைத்தாலும் லக்ஷ்மி தீர்த்தத்தில் ஸ்நாநம் கிடைப்பது அத்தியந்த துர்லபம். அதிலும் சிராவண மாஸக் கடைசி வெள்ளியும் கூடுவது மகா துர்லபம். இதற்கிணங் கப் பெரியோர்கள் ஓர் இதிஹாசம் சொல்லுவார்

கள். என்னவெனில் பூர்வகாலத்தில் துராசாரகிருத் யங்களையே செய்துகொண்டுவந்த பரமசண்டாளனை பிராமணன் சிராவண மாஸத்தில் கடை வெள்ளியில் இத்தடாகத்தால் நீராடி சகலதோஷ நிவாரண னனது மன்றி ஜநந முதல் பேசியறியாத ஊமைத்தனத்தி னின்றும் விடுபட்டு விளங்கினன். அந்த லட்சுமீதிர்த் தத்தினுடைய வைபவம் தர்மார்த்த காம மோக்ஷங் களுக்கும் புத்திர பௌத்திராதி ஸர்வ சம்பத்துக்களுக் கும் ஹேதுவானது. இதின் மஹிமையைக் காதினல் சிரவணம் செய்தாலும் மகா பாதகங்க லெல்லாம் விலகியோடும்.

## பதின்மூன்ருவது அத்தியாயம்.

### தர்மநாதபுத்திர உபாக்கியானம்.

நந்திகேசுவரர் சிரம்வணங்கி எம்பெருமானே! இவ்விலக்குமி தீர்த்தத்தில் மூழ்கிப் புனிதமான சிலர் சரிதமுங் கூறவேண்டுகின்றேன் என்னலும் சுவாமி கூறுவதானர். முற்காலத்தில் ரேவாநதி தீரத்தில் தர்ம நாதனெனப் பெயர் பெற்ற ஒரு பிராமணன் ஸர்வ சாஸ்திரங்களுடைய உண்மையை யறிந்து பொறுமை யில் பூமிபோன்று பாபரஹிதனும், ஜிதேந்திரியனு யும் தன்னை யடைந்தவர்களுக்குள்ள ஸர்வ ஸம்ஸயங் களையும் நிவர்த்தி செய்பவனும் மந்திர சாஸ் திரங்களிலும் யந்திர சாஸ்திரங்களிலும் சூக்ஷ்ம மறிந்தவனும் சிவபூஜா துரந்தரனும் எப்பொழுதும் சிவகதாலம்பம் செய்பவனும், சிவதருமத்தில் ஆசை யுடையவனும், கரவீரம் முதலான முக்கியமான புஷ்

பங்களைக் கொண்டு சம்புவுக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்பவனுயுமிருந்தனர். அவர்அப்படி யிருக்கையில் அவருக்கு மிகவும் சுந்தரனுய் ஞானஹீநனுய் மூகனுய் சிவத்துரோகம் செய்பவனுய் ஒரு புத்திரன் பிறந்தான், அவன் பாலியமுதல் பாவ கிருத்தியங்களையே செய்து கொண்டுவந்து உபநயனஞ் செய்யும் பருவத்தையடைந்தான். அந்த மூகனுன புத்திரனுக்கு பிதா உபநயனம் செய்யப் பிரியப்படவில்லை. பின்பு, மாதாவினுடைய பலவந்தத்தாலே உபநயனம் செய்வித்தார். ஜல மத்தியில் வேதமாதாவான காயத்திரியை எழுதுவித்து ஊமையான புத்திரனுக்கு உபதேசம் செய்து வைத்தார். காலக்கிரமத்தில் சுந்தரனென்னும் அந்த புத்திரன் யௌவன தசையை அடைந்தான். பதினுறு வயதும் சென்றபின் துன்மார்க்கத்தில் நன்கு பழகிப் பலராலும் நிந்திக்கப்பட்டவனுகவே யிருந்தான். அறிவில்லாதவனுனுலும் ஊமையனுனுலும் வில்லிகள்போல் திருட்டையே தொழிலாய்ப் பூண்டு வழிப் பிரயாணிகளை அடித்து அவர்கள் திரவியங்களை விசேஷமாய் அபகரித்து ஜாதி வேற்றுமையின்றிச் சங்கமம் செய்வானுனன். சிவ க்ஷேத்திரத் தனமாகிலும் அபகரித்துக் கொடுத்து ஸ்திரீ லோலனுகவே சுகித் திருந்தான். இவனைக் கண்ட ஸ்திரீகள் அழகினுலும் சரீர புஷ்டியினுலும் திரவிய லாபத்தாலும் மோகமடைந்து இவனது துர் எண்ணத்திற்கு இணங்குவார்கள். சிவ தரிசனம்செய்வது அவனுடைய ஜென்மத்திலுமில்லை. மாதா பிதா பந்துவர்க்கங்களும் பலவாறு முயன்று அவனது துர்நடத்தையைத் தவிர்க்க எண்ணியும் முடியவேயில்லை. இவனிப்படி நடக்கையில் பிதாவும் காலஞ்சென்றுர்.

அவருடைய உத்தரகிருத்தியங்களையும் செய்யாமல் விட்டுவிட்டான். அவ்விஷயத்திலும் மாதாவினுடைய வாக்கியமும் உபயோகப்படவில்லை. ஞானமற்று மூகனாகிய தால் தாய்மகிமையை யறியாமல் அவளையுங் காப்பாற்றாது விட்டான். காலம் சென்றுவர அவளு மிறந்தொழிந்தாள். கிருகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் சிவபூஜா மூர்த்திகளையும் கிரயம் செய்து சுகித்தான். ஸாதுக்கள் ஒவ்வொருவரும், அச்சுந்தரனென்னும் பிராமண குமாரனை துராசார முள்ளவனென்று இகழாதவர்கள் கிடையாதென்றபோது நந்தீசர் பெருமானை வணங்கி எப்பொழுதும் தர்ம சீலனான தர்மநாதனுக்கு இப்படி அறிவிலனும் ஊமையாயும் உள்ள புத்திரன் எவ்வாறு ஜனித்தான். துர் விருத்தனான சுந்தரனுக்கு எக்காரணத்தால் துர்புத்தி யானது உண்டாயிற்று. இவைகளை யுரைக்கவேண்டும் என்றுவினவ, சம்புவானவர் சொல்லுகிறார். தர்மநாதனென்னும் விப்பிரன் சிவபக்தியும் ஸாது சீலமு முடையவனென்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் பாவதோஷத்தால் தான் அஸத்புத்திர னுதயமானான். அதென்னவெனில், நாடோறும் கொய்துவந்த சிவபூஜா புஷ்பங்களில் அஜாக்கிரதையாலே, மலராமல் அரும்பாயிருந்த மாலதீபுஷ்பத்தைச் சேர்த்து அர்ப்பணம் செய்துவிட்டான். அந்த தோஷத்தாலே வாய் மலராத புத்திரன் பிறந்தான். அப்புத்திரனும் முன் பிறப்பில் பிரதோஷ காலத்தில் சம்பு தரிசனத்தில் நர்த்தனம் செய்த ஒரு பக்தரை இகழ்ந்த காரணமும் ஒன்றுண்டு. அதுகொண்டு இப்பிறவியிலு மிவ்வித துர்புத்தி யுண்டாயிற்று. ஆகிலும் ஓர் சமயம் சிவராத்திரியில் சிவாலயத்தில் மகாபாவனமான தீபவரிசைகளைப் பரிகாசமாய்த் தூண்டிவிட்ட

காரணத்தால் கொஞ்சம் புண்ணியமும் நேர்ந்திருந்தது. ஆகையால் இந்த க்ஷேத்திரத்தில் லக்ஷ்மி தீர்த்தத்தில் ஸ்நாநம் கிடைத்து மூகத்துவத்தையும் நீங்கிப் பூர்ணஞானியாய் விட்டான். எப்படியெனில் மகா பாபியான மூகன் மதுபான துரந்தரையான ஒரு ஸ்திரீயுடன் கூடி தேசாந்தரமே சென்று சஞ்சரித்து இரவில் கிடைத்தமட்டில் சோரகிருத்தியத்தையும் நடத்திக் கொண்டு அத்திரவியங்களை அவளுக்கே அர்ப்பணம் செய்து வந்தான். அவன் கிரமமாய்த் தென் திசையை நோக்கி அநேக ஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டு பாதக நாசனமான இந்த க்ஷேத்திரத்தை அடைந்தான். இங்கும் ஓரிடத்தில் சுவர்ண பாத்திரத்தைத் திருடி உடனே விக்கிரயம் செய்து அப்பொருளையும் அவளுக்கே கொடுத்து அவளுடன் சுகித்து வந்தான். இவ்விதம் அவளைத்தொடர்ந்து கொண்டே ஆக்கினேய பாகத்தின் சமீபத்தில் மிகவும் விநோதமான ஒரு தாமரைத் தடாகத்தைக் கண்டு நெருங்கினான். அதுதான் லக்ஷ்மீ தீர்த்தம். அக்காலத்தில் உற்ஸவம் செய்து ஜனங்கள் கடை வெள்ளிக்கிழமையில் அந்த லக்ஷ்மீ தீர்த்தத்தில் அவபிருதஸ்நாநம்செய்து வந்தார்கள். அதுகண்ட மூகனும் பூர்வபுண்ணிய வசத்தாலே அவர்களுடன் அத்தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்தான். உடனே சுந்தரேசனுடைய கிருபையினாலே பாவங்கள் தொலைந்து மூகை நீங்கி பிரஹஸ்பதிக்கிணையாய் விட்டான். ஜநநமுதல் தொடர்ந்துவந்த ஊமைத்தன்மை உடனே தொலைந்தது. சோரமாதும் அந்த தேவர்களால் பூஜிக்கும்படியான வேறு சரீரமடைந்து சிவசின்னங்களைத் தரித்த சிவ தூதர்களாலே கொண்டுவரப்பட்ட தேவ விமானமேறிக் கைலாயம் சேர்ந்தாள்.

ஆகையால் அந்த தடாகமானது ஸமஸ்த கலியாண குணங்களுக்கும் காரணமாயும் லக்ஷ்மியால் நிர்மாணம்செய்யப்பட்டு மகா பாதகங்களையும் போக்கத்தக்கதாயுமிருக்கிறது.

## பதின்நான்காவது அத்தியாயம்.

### ஸுகேது உபாக்கியானம்.

ஓ நந்திகேசா! இனிக் குருதீர்த்தத்தினுடைய மகிமையைச் சொல்லுவோம் கேளும். அதைக்கேட்பவர் சகல பாவத்தினின்றும் விடுபடுவார்கள். அக் குருதீர்த்தம் அந்த க்ஷேத்திரத்தில் எமது மாநஸ ஸங்கல்பத்தாலுண்டானமையால் மாநஸ ஸரஸுஎன்று பெயர்பெறும். அதற்கு குருதீர்த்தம் என்றும் பெயருண்டு. அந்த தீர்த்தம் எப்போதும் தாமரை முதலான மலர்கள் நிறைந்து நிர்மலமாக விளங்கும். மற்றும் மதுவையுண்ணும் வண்டினங்களாலே அழகு மேலிட்டு மயில் கூட்டங்களாலே பொலிவுற்று மிருக்கும். தடாகத்தின் கரைகளிலுள்ள மல்லிகை முதலிய புஷ்பங்கள் மணம் வீச ஸர்வ தீர்த்தங்களுக்கும் உத்தமமாயும் இருக்கும். அதை நேத்திரங்களாலே பார்த்தாலும், அதில் ஸ்நானம் செய்தாலும், அதன் நீரைப் பானம் செய்தாலும், பிரம ஹத்தி முதலான பாவங்களும் நசிக்கும். உலகத்தில் ஸத்கருமம், அஸத்கருமம் அறியாமல் உதயம் முதல் பாவமே செய்து வயிறு வளர்ப்பவனும் அந்த குருதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் சுத்தனாய் விடுவான். பின்னும் தடாகங்களையும் தோட்டங்களையும் அழித்தவனானாலும் விபூதி உருத்திராக்ஷங்களைப்

பழித்தவ ஞனுலும் சிவநாமங்களை இகழ்ந்தவனுனுலும் மாதரு பிதரு சிராத்தங்களை விட்டவனுனுலும் குரு தீர்த்தத்தில் ஒரு தடவை ஸ்நாநம் செய்தால் ஸர்வ பாவங்களும் கழிந்து அஷ்டைசுவரியவாஞய் விடுவான். இந்தத் தீர்த்தத்துக்குக் கண்ணுவரிஷி ஸூரிய பகவானே தேவதை, சண்டேசனே ரக்ஷகன், விருக்ஷமோ மோகிழம், பஞ்சாக்ஷரமே மந்திரம். ஸ்நாநம் செய்பவர் இவைகளை ஸ்மரிக்கவேண்டும். ஸ்நாநம் செய்தபின் கோதுமை, பசு, பூமி, வெள்ளி, தங்கம், எள், ஆடு, உலோகம், கடலை இவற்றுள் ஒன்ருே பலவோ அவ்விடத்தில் தானம் செய்தல் நலம். இவைகளிலும் இந்த க்ஷேத்திரத்துக்கு முக்கியமானது கடலை. வாதரோகியும் பித்தரோகியும் க்ஷயரோகியும் தலைவலிக் காரனும் ஸர்வ ரோகத்தினின்றும் விடுபடுவான். இதைப்பற்றின மற்ருெரு புராதன சரித்திரமும் உண்டு. முன்ஞெரு காலத்தில் ஸௌராஷ்டிர தேசத்தில் பாரத்துவ ராஜகுலத்தில் ஜனித்து ஸுசர்மாவென்னும் பெயரால் பிரசித்தனுய் வேத வேதாங்கங்களைக் கரைகண்டவனுய் சிவதத்துவ விவேகமுள்ளவனுய் சைவசமய முறையறிந்தவனுய் ஒருவிப்பிரனிருந்தான். அவனுடைய பாரியை மகா பரிசுத்த சுபாவமுள்ளவளாயும் மிகவும் நற்குணமுடையவ ளென்பதற்குத் தகுந்த அடையாளமுள்ளவளாயு மிருந்தாள். அவள்தன் பர்த்தாவை ஸாக்ஷாத் பரமசிவனுகவே பாவித்துவந்தாள். சுதர்மாவும் அவளை மணந்து மிகவும் அழகான ஒருபுத்திரனை அடைந்தான். அப்புத்திரனும் சுகேது வென்று பெயர்பெற்று ஐம்புலன்களையும் வென்றவனுக விருந்தான். பிதா அவனுக்குச் சரியான காலத்தில் ஜாதகர்மம் முதலாக உபநயநம் விவாகங்களையும் முறையாய்ச் செய்து வந்தான். வே

தங்களையும் சாஸ்திரங்களையும் புராணுதிகளையும் நன்ருய் கற்பித்துவந்தான். சுகேதுவானவன் இவ்விதமாய் பிதாவால் கற்ற நுட்பமான பொருள்களை அறிந்தவனு னதால் தாய்தந்தைய ரிடத்து அன்புள்ளவனு யிருந்த னன். சிலகாலம் சென்றபின் பாஞ்சாலதேசாதிபதியின் சபையை அடைந்து வேதத்தில் பரீக்ஷிக்கப்பட்டு உத்த மமான சன்மானமும் பெற்று வந்தான். மாதா பிதாக் கள் ராஜஸபையில் சன்மானம் பெற்று வந்த குமார னைப் பார்த்து வெகு ஆநந்த மடைந்தார்கள். சுகேது வேதாத்தியயநத்திற்கு முக்கிய பிரயோஜனமான யஜ் ஞங்களைத் தானும்செய்து பிறருக்கும் செய்துவைத்து வந்தான். இப்படி ஸத்கருமங்களையே செய்துவந்தசுகே துவுக்கு வயது அறுபது சென்று விட்டது. பிதாவை விட்டு எக்காலமும் பிரிந்தறியாதவனுக்குபிதுருவியோ கமும் நேர்ந்து விட்டது. மாதாவும் தன் பர்த்தாவினு டைய சரீரத்தை ஆலிங்கனஞ் செய்துகொண்டு அநு மரணம்செய்துகொண்டாள். மாதா பிதா இவருக்கும் சிரார்த்தாதிகளை விதிப்படி செய்து வந்தான். பிதுரு தீக்ஷைக்குரிய நியமங்களோடே வருஷம் முழுதும் யாதொரு பிரதிக் கிரகமும் போகாமல் தன் கிருகத் திலேயே வஸித்து வந்தான். ஆகிலும் ஜந்மாந்தர கர்ம வசத்தாலே பலமான தலைவலியானது உண்டாயிற்று. கொடிய சிரோபாதையால் பீடிக்கப்பட்டு அவனுக்கு ஸ்நாந தானங்களிலும் பிரதோஷ காலங்களில் சிவார் ச்சனைகள் செய்வதிலும் பிதுரு கர்மங்களிலும் முன் போல சரியாய் சிரத்தைஉண்டாகவில்லை. அவனுடைய பத்தினிக்கு சோபனை யென்று பெயர். சிரோபாதை யால் கஷ்டப்படுகிற பர்த்தாவைப் பார்த்து அவனுக் காகத்தான் செய்யு முபாயமொன்று வறியாதவளா

யிருந்தாள். தலங்களை எங்கு கண்டாலும் அவள் வணங்கி பலரையும் விசாரித்துப் பர்த்தாவின் ஆரோக்கியத்திற்காக தினந்தோறும் துர்க்கா தேவியை அர்ச்சித்து வந்தாள். அப்படியே சூரிய பூஜையும் செய்து வந்தாள். ஆயினும் ரோகத்துக்குச் சாந்தி பிறக்காமையால் தன் கணவனோடு வாமதேவாச்சிரமம் அடைந்து குரு சுவாமியைக் கண்டு பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து பரமபக்தியுடன் தன் பர்த்தாவுக்கு ஸம்பவித்திருக்கும் சிரோ பாதையை விநயத்துட னறிவித்துப் பரிகாரம் வேண்டினாள். அதைக்கேட்ட வாமதேவரும் சங்கர பாதாம்புயத்தை ஸ்மரித்துக் கொண்டு சுகேதுவினுடைய தீராத சிரோவேதனை நசிக்கும்படி ஆலோசித்துச் சாஸ்திரங்களையு மாராய்ந்து சொல்லுகிறார்.

## பதினைந்தாவது அத்தியாயம்.

### சுகேதுவின் சிரோவேதனை நிவிர்த்தி யுரைத்தது.

அந்த வாமதேவர் யோகக் கண்ணினால் இவ்வினை வலியை யறிந்து அப் பெண்மணியைப் பார்த்துச் சொல்லுகிறார். சகல நற்குணங்களும் பொருந்தியபெண்ணே! உன் பர்த்தாவின் தலைவலிக்குக் காரணம்அறிந்தமட்டில் சொல்லுகிறேன். அந்த ரோகம் அவனுடைய பூர்வ ஜந்மத்தில் செய்த கர்மத்தால் உண்டாயிருக்கின்றது. இதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம். அவன் முன் ஜந்மத்தில் ஹரி ஹர க்ஷேத்திரத்தில் பிறந்து ஸர்வ சாஸ்திரங்களும் அறிந்தவனாகி அநேக புத்திரகளத்திரங்களோடும் வாழ்ந்து கிருஷித் தொழிலில் முயற்சியுள்ளவனாயும் வைசியர்கள்போல தன ஆசைமேலிட்

ட்வனுய் நிஷ்கம் என்னப்பட்ட தங்க நாணயங்களுக்கு அதிபதியாகியும் அளவற்ற பசுக்களை மேன் மேலும் ஸம்பாதித்துத் தன் முன்னோர்கள் செய்த வேள்வியின் காரணத்தால் தான் தீக்ஷதனென்று பெயர் பெற்றும் ஒருவிதமான மகா பாபத்துக்கு ஆளானுன். அதென்ன வெனில் உன் பார்த்தாவின் கிருகத்திற்கு எதிராக மகா புண்ணியாத்மா வாயும் சிவஞான வானுயும் சதாகால மும் சிவசரித்திர விருப்ப முள்ளவனுமான ஒருபுராணி கன் சிவயோகி யென்று பெயர் பெற்று ஸாயங்காலத் தில் நாள் தவருமல் சைவாக மங்களை வாசித்து வந் தான். வெகு பிராமணர்கள் தவருமல் அதைச்சிரவணம் செய்துவந்தார்கள். பெண்ணே! உன் பர்த்தாவானவன் எப்பொழுதும் அலைச்சல்திரிச்சலில்லாமல் கிருகத்திலே யே சுகியாய் வசிப்பவனுயிருந்தும் ஈசனுடைய சரித் திர கதாஸாரமானது அமிருத நதிபோல் பெருகிவரும் போது கேட்கப் பிரியப் படாமல் தன் கிருகத்தை விட்டு விட்டு வெளியில் போய்விடுவான்! அந்த சிவ கதை ஸாங்கமாக யெப்பொழுது முடியுமோ அப்பொ ழுதே வீடுவந்து சேருவான். உன் பர்த்தாவை யாரா வது நீ இப்படிச் செய்வானே னென்று விசாரிப்பார்க ளாயின் பிராமணன் வீணுய்க் கத்துகிருன், அவரது இரைச்சலால் எனக்குத் தலைவலி யுண்டாய் விடும்போ லிருக்கிறது. ஆகையால் வெளியில் போய்விடுகிறேன் அந்தக் கதாப்பிரஸங்க மென்னும் இரைச்சல் அடங்கின பிறகு வந்துசேருகிறேன் என்று உத்தண்டமாய் யுத் தரம் சொல்லுவான். இவ்விதமாய்க் காலங்கழித்த உன் கணவனுக்கு வயது அறுபதும் சென்றது. பிறகு வியா தியால் பீடையடைந்து வயது சென்றமையாலும் அதி ஸாரபேதியால் கிலேசப்பட்டு அர்த்த ராத்திரியில் மரண மடைந்தான்.

பிறகு உன் பர்த்தா யமதூதர்களா லிழுக்கப்பட்டு யம பட்டணம் சென்று பல வருஷகாலம் பலவித நரகங்களையும் அனுபவித்துச் சிறிது புண்ணிய சேஷத்தாலே மறுபடியும் பிராமண ஜந்மத்தை அடைந்தான். இவன் சிவகதையை தூஷித்த பாவத்தால் சிரோரோக முடையவனாய் வருந்துகின்றான். ஆயினும் வெளியில் புறப்பட்டுப் போகும்போதும் வரும்போதும் அவ்வப்போது ஒவ்வோ ரிடத்தில் சிவகதை காதில் பட்ட புண்ணியத்தால் இவனுமொரு சிரேஷ்டனான பிராமணனுடைய உதரத்தில் புத்திரனாய் ஜநித்து உன்னைப் போன்ற நல்ல களத் திரத்தையும் அடைபவனானான். இதுவே திருஷ்டாந்தம். ஆகையால் கதாமிருதத்தைக் காதுகளால் தானும் சிரவணம்செய்து அநேகம் ஸாதுக்களுடன் சேர்ந்து அவர்களையும் பானம் செய்யும்படி செய்யவும் வேண்டும். ஆகிலும் உன் பர்த்தாவின் சிரோபாதைக்குத் தகுந்தசாந்தியைச் சொல்லுகிறேன். ஒரே சித்தமாய்க் கேள். காவேரியின் தென்கரையில் கீழ் சமுத்திரத்தின் ஓரமாய் மேல் புரத்தில் ராஜவிருக்ஷமென்றொரு க்ஷேத்திரமுண்டு. அது தன்பெயரை உச்சரித்த மாத்திரத்தாலே ஸர்வ பலன்களையுந் தரும் வல்லமை யுள்ளதாய் விளங்குகிறது. நீ பர்த்தாவுடன் அவ்விடம் சேர்ந்து திரிலோக நாதனும் ஸர்வ பிராணிகளுக்கும் ரக்ஷகனும் தேவர்க ளதிபதியுமான சங்கரன் அவ்விடம் தரிசனந் தந்தருளுகிறார். அச்சிவாலயத்துக்கு ஈசாந்திய திக்கிலே ஈசுவரனுடைய மாநஸகல்பிதமான பெரிய தடாகமொன் றிருக்கிறது. அங்கு சென்று அம்மகா தீர்த்தத்தில் தாமஸ மின்றி உன் பர்த்தாவை ஸ்நாநம்செய்துவை. அங்கு மலர்ந்த கொன்றை விருக்ஷத்தருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ சுந்

தரநாயகி யம்மையுடன் சுந்தரேச மூர்த்தியைப் பிர தக்ஷண நமஸ்காரங்கள் செய்து வைக்க வேண் டும். உன்னுடைய புண்ணிய வசத்தாலே மார்கழி மாதமும் ஸமீபத்திலிருக்கிறது. அதிலும் ஆருத்திரா நக்ஷத்திர தினத்தில் அருணோதயகாலத்தில் அத்தடா கத்தில் ஸ்நானம் செய்யும்படி செய்வாயாக வென்று சொல்லக்கேட்டு அப்படியே தன் பர்த்தாவை நிர்ப்பந்த மாய் அழைத்துக்கொண்டு அந்த க்ஷேத்திரமே வந்து சேர்ந்தாள். சேர்ந்த பிறகு ஸாக்ஷாத் பரமசிவனு டைய மாநஸ தீர்த்தத்தில் தனது பர்த்தாவோடு ஸ்நா னஞ் செய்துகொண்டு வாய் பேசாமல் மௌனி யாய் விரதாநுஷ்டானங்கள் செய்து வந்தாள், அன்றி, வாமதேவரிஷியாலே உபதேசிக்கப்பட்ட மார்க்கத்தில் எல்லா விதிகளையும் பர்த்தாவைக் கொண்டு ஒருமாச காலம் நடத்தி வந்து கடைசியில் திருவாதிரை நக்ஷத் திரத்தில் ஈசுவரனுடைய சந்நிதாநத்தில் ஸ்நாநம்செய்து நமஸ்கரித்து நிற்க சுகேதுவினுடைய சிரோரோகமா னது சாந்தமாய்விட்டது. பிறகு பிராமணனும் பாரி யையோடு மகா சந்தோஷமுள்ளவனாய் தன்முன் தரிச னந்தந்தருளும் சிவபெருமானை நமஸ்கரித்து அப்பர மேச்வரனை வாயாரத் துதித்து வணங்கினான். பின்னும் அவ்வாருத்திரா நக்ஷத்திரத்தில் பெருமானுக்குவிசேஷ பூஜை நைவேத்தியங்கள் செய்வித்து அவரிடம் அனு மதியும் பெற்று பாரியையோடும் புத்திரனோடும் தன் தேசமடைந்து பின்னும் பரமாநந்த பரிபூர்ணனாய் வாழ்ந்திருந்தான். ஆகையால் அந்த தீர்த்தத்துக்குச் சரியானது திரிலோகத்திலு மில்லை. ஆலயத்திற்கு மேல்புறமாய் முன்னொருகால் வருணபகவானால் உண் டாக்கப்பட்ட வருண தீர்த்தமென்னும் உத்தம தீர்த்

தம் ஒன்றிருக்கிறது. அதின் வைபவமெப்படிப்பட்ட தென்றால் முன் அகஸ்தியர் சமஸ்தமான ரிஷிகளோடும் தேவதைகளோடும் ஆசமனஞ் செய்து ஸமுத்திரஜலத்தை தன் உள்ளங்கையால் பானம் செய்து விட்டாரல்லவா. அப்பொழுது அந்த சமுத்திரத்தில் வஸித்துக் கொண்டிருந்த ஜலசரங்களும் ஜலவாசிகளான மனிதர்களும் பெருந் துன்பப்பட்டார்கள். பிறகு சமுத்திர ராஜனும் துக்கமடைந்தவனாகித் தலைவணங்கி கைலாயபதியான சம்புவின் தரிசனம் செய்து தானினி செய்யவேண்டுவதென்னவென்று பிரச்னம் செய்தான். பெருமானும் அந்த ராஜவிருக்ஷவனத்தில் வஸிக்கும்படி உத்திரவு செய்தார். வருணனுமப்படியே அவ்விடம் சேர்ந்தான். அந்த க்ஷேத்திரத்தில் வைகாசி மாஸத்தில் அடைந்து சுந்தரேச மூர்த்திக்கு விசேஷ உத்ஸவமும் பூஜை நைவேத்தியங்களும் செய்வித்து மேற்கு திக்கில் நிர்மலமாயும் சுபமாயும் ஒரு தடாகத்தை உண்டாக்கி அவபிருதஸ்நாநமும் செய்து வந்தான். அந்த மாகாத்மியத்தாலே தன்னுடைய ஸாமர்த்தியத்தை முன்போலவே யடைந்தான். ஆகையால் அந்த தீர்த்தத்துக்கு வருணதீர்த்தமென்று பிரவித்தமான பெயர் உண்டாயிற்று. உலகத்தில் கூர்மாண்டம் என்றும் மாரி யென்றும் சொல்லப்பட்ட துர்தேவதைகளாலே வாதைப்பட்டிருந்தாலும் அந்த வருண தீர்த்தத்தில் ஒரே தடவை ஸ்நாநம் செய்தால் ஸமஸ்தமான வாதைகளும் போய்விடும். பின்னும் விசேஷமான ஸௌக்கியத்தையும் அடைவார்கள். அந்த தீர்தத்திற்கு மைத்திராவருணி ருஷியாவர். ரக்ஷகர் முருகக் கடவுள். தேவதை ஏகாம்பிரனென்னும்விப்பிரன். விருக்ஷம் புந்நாகம். ஸ்நாந காலத்தில் விசேஷ பக்தி

யோடு இவர்களை ஸ்மரித்தால் ஸமஸ்த பலன்களையு மடைவார்கள். இந்த க்ஷேத்திர மாஹாத்மியத்தை ஒரு தடவை சிரவணம் பண்ணினால் அநேக அசுவமேதத்தின் கடைசியில் அவபிருதஸ்நாநம் செய்த பலனை அடையலாம். எவன் காலையில் எழுந்து ஸ்நாநம் செய்து நியமத்துடன் மிக பக்தியோடு ஒரு தடவையாவது சிரவணம் செய்கிறானோ அவன் ஸாக்ஷாத் சங்கரனுக்குச் சமமேயாவான் என்பதில் சந்தேகமில்லை. பின்னு மிதை ஒரே தடவை சிரவணம் செய்தவர்கள் துர்பிக்ஷ காலத்தில் மகா பிரீதியோடு கோடி பிராமணர்களுக்கு அறுசுவையோடு போஜநம்செய்வித்தபலனை அடைவார்கள். இந்த க்ஷேத்திரமானது எக்காலத்திலாகிலும் ஜீர்ணமாகுமானால் அதை முன்போல் சௌந்தரியநாயகியோடும் ஏகாமிரநாதரோடும் பிரஹஸ்பதியோடும் வருணனோடும் ஏகாமிரனென்னும் விப்பிரனோடும் செய்கிறார்களோ அவர்களுடைய பலத்தை என்னாலும் வர்ணிக்க முடியாது. இவ் விபவத்தை யாராயினும் மேன்மேலும் விவரித்தாலும் முடியுமோ. ஆகிலும் சுருக்கமாய் சொல்லுகிறேன். புத்திர பௌத்திரர்கள் முதலான ஸர்வ பலத்தையும் இவ்வுலகிலடைந்து தீர்க்காயுள் பொருந்தினவர்களாக ஆண்டனுபவித்த பிறகு நம்முடைய சாயுஜ்யத்தையும் பெற்று மகிழ்வார்கள்.